தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

## அமெரிக்காவில் கடும் பனிப்பொழிவு: இயல்பு வாழ்க்கை முடக்கம்




அமெரிக்காவில் கடந்த 10 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு கடும் பனிப்பொழிவு நிலவுகிறது. இதனால் மக்களின் இயல்பு வாழ்க்கை முற்றிலுமாக முடங்கியுள்ளது.

அமெரிக்காவின் மத்திய மேற்கு மற்றும் கிழக்கு மற்றும் தெற்குப் பகுதி, கனடாவின் கிழக்குப் பகுதி ஆகியவற்றில் கடும் பனிக்காற்று வீசுவதால் பள்ளிகள் மூடப்பட்டுள்ளன. விமான சேவை நிறுத்தப்பட்டுள்ளது.

மக்கள் வீட்டை விட்டு வெளியே வர முடியாதபடி முடங்கிக் கிடக்கின்றனர். தோலில் பனி வெடிப்புகள் ஏற்படுவதில் இருந்து தற்காத்துக் கொள்ள முகம் தவிர உடல் முழுவதும் கம்பளி உள்ளிட்ட ஆடையால் மூடியுள்ளனர்.

சாலைகளில் மிக அதிகமாக பனி மூடியுள்ளதால் வாகனப் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.

பனிச் செதுக்கும் கருவி மூலம் சாலைகளில் உறைபனிகள் அகற்றும் நடவடிக்கையில் அரசு ஈடுபட்டு வருகிறது.

நாட்டின் மத்திய பகுதியில் திங்கள்கிழமை வெப்பநிலை மைனஸ் 18 டிகிரி செல்சியஸாக இருந்தது.

மின்னியாபோலிஸில் வங்கிகள் மற்றும் கடைகள் மூடப்பட்டிருந்தன. அங்கு மைனஸ் 31 டிகிரி செல்சியஸ் வெப்பநிலையுடன், கடும் குளிர் காற்றும் வீசியது.

மில்வாகீ, செயின்ட். லூயிஸ் மற்றும் சிகாகோவில் மைனஸ் 27 டிகிரி செல்சியஸ் வெப்பநிலையே நிலவியது.

ஒக்லகோமா, டெக்ஸாஸ் மற்றும் இண்டியானா ஆகிய பிராந்தியங்களில் மைனஸ் 40 டிகிரி செல்சியஸ் வெப்பநிலையில் பனிக்காற்று வீசுகிறது.

மின்சாரம் தடைபட்டதால் மத்திய அட்லாண்டிக் மற்றும் மத்திய மேற்கு மற்றும் தெற்கு பகுதிகளில் 61 மில்லியன் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும், கடந்த சனிக்கிழமை முதல் இத்தகைய குளிருக்கு பலர் உயிரிழந்து வருவதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## தென் தமிழகத்தில் மழை பெய்ய வாய்ப்பு

சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்ததாவது:

வங்கக்கடலில் உருவான தாழ்வு மண்டலம் தற்போது வலுவிழந்து குறைந்த காற்றழுத்தத் தாழ்வு பகுதியாக மாறியுள்ளது. அது மன்னார் வளைகுடா அருகே நிலை கொண்டிருப்பதால் தென்தமிழக கடலோர மாவட்டங்கள் மற்றும் டெல்டா மாவட்டங்களில் இன்று மழை பெய்ய வாய்ப்புள்ளது.சென்னையைப் பொருத்த வரை வானம் மேகமூட்டத்துடன் காணப்படும்.

## பொங்கல் பண்டிகை : கோயம்பேடு மார்க்கெட்டுக்கு கரும்பு வரத்து தொடக்கம்



பொங்கல் பண்டிகையை முன்னிட்டு சென்னை கோயம்பேடு மார்க்கெட்டில் கரும்பு வரத்து செவ்வாய்க்கிழமை (ஜன.7) தொடங்கியது.

ஆண்டுதோறும் தை மாதம் முதல் நாள் பொங்கல் பண்டிகை நாடு முழுவதும் சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு வருகிற 14-ஆம் தேதி கொண்டாடப்படும் பண்டிகைக்காக கோயம்பேடு மார்க்கெட்டுக்கு வியாபாரிகள் "பூங்கரும்பு' எனப்படும் பொங்கல் கரும்புகள் உள்ளிட்ட பல்வேறு ரக கரும்புகளை கடந்த சில நாள்களாக விற்பனைக்காக கொண்டு வரத்தொடங்கியுள்ளனர்.

இதுகுறித்து கரும்பு மொத்த வியாபாரி பி.ராதாகிருஷ்ணன் கூறியது:

ஒரு கட்டு முதல் தர கரும்பு ரூ.200 முதல் ரூ.300 வரையில் விற்கப்படுகிறது. இதில் 15 முதல் 20 கரும்புகள் வரை இருக்கும். ஒரு கரும்பு ரூ.20-க்கு விற்கப்படுகிறது.

கடந்த ஆண்டு பொங்கல் பண்டிகையையொட்டி 1,000 லோடு கரும்புகள் லாரிகள் மூலம் விற்பனைக்காக கொண்டுவரப்பட்டன. பொங்கல் பண்டிகைக்கு இன்னும் சிலநாள்களே உள்ள நிலையில் மயிலாடுதுறை, பண்ருட்டி, மதுரை, சிதம்பரம் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து கரும்புகள் விற்பனைக்காக கொண்டுவரப்படுகின்றன.

பண்டிகைக்காக சென்னையில் உள்ள கல்வி மற்றும் தொழில் நிறுவனங்களைச் சார்ந்தோர் முன்னதாகவே தங்கள் சொந்த ஊர்களுக்கு செல்வதால் சில நாள்கள் முன்பே பண்டிகையை கொண்டாட முடிவு செய்துள்ளனர். அதைத்தொடர்ந்து கரும்பு விற்பனை செவ்வாய்க்கிழமை (ஜன.7) முதல் தொடங்கி உள்ளது. கடந்த ஆண்டைக் காட்டிலும் இந்த ஆண்டு கரும்பு விற்பனை சிறப்பாக இருக்கும் என எதிர்பார்க்கிறோம் என்றார்.

கோயம்பேடு மார்க்கெட்டில் ஒரு கரும்பு ரூ.20-க்கு விற்கப்பட்டாலும் வெளிச்சந்தைகளில் ஒரு ஜோடி கரும்பு ரூ.60-க்கு விற்கப்படுகிறது.

கரும்பு சாகுபடி குறித்து தாளவாடி மற்றும் மயிலாடுதுறை விவசாயிகள் வேலுச்சாமி, முருகன் ஆகியோர் கூறியது: ஒரு ஏக்கரில் கரும்பு சாகுபடி செய்ய 60 ஆயிரம் முதல் 75 ஆயிரம் வரை செலவாகிறது. பருவமழைக் குறைவு உள்ளிட்ட காரணங்களால் கரும்பு சாகுபடி தற்போது பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் விலை அதிகரித்துள்ளது என்றனர்.

### ஒரு சொட்டு தண்ணீரில் அதிக உற்பத்தி: பிரசாரம் தொடக்கம்

ஒரு சொட்டு தண்ணீரில் அதிக உற்பத்தி குறித்த விழிப்புணர்வு பிரசாரப் பயண ஊர்தியை காஞ்சிபுரம் ஆட்சியர் கா. பாஸ்கரன் செவ்வாய்க்கிழமை தொடங்கி வைத்தார்.

தமிழ்நாடு நீர்வள நிலவளத் திட்டத்தின்கீழ் பாசன நீரை சிக்கனமாகப் பயன்படுத்துவது குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த திட்டமிடப்பட்டது.

மேலும் குறைந்த தண்ணீரில் நிறைந்த சாகுபடி செய்வது குறித்த தொழில்நுட்பப் பயிற்சிகளை விவசாயிகளுக்கு அளிப்பது என்றும் முடிவு செய்யப்பட்டது. அதன்படி ஒரு சொட்டு தண்ணீருக்கு அதிக உற்பத்தி திட்டமானது நெல், மக்காச்சோளம், உளுந்து, நிலக்கடலை, கரும்பு ஆகிய பயிர்களில் நீர் பயன்பாட்டுத் திறனை அதிகரித்து, பயிர் உற்பத்தித் திறனை உயர்த்த தமிழகத்தின் முக்கிய வடிநிலங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. காஞ்சிபுரம், திருவள்ளூர், கடலூர், விழுப்புரம், திருவண்ணாமலை, வேலூர் ஆகிய மாவட்டங்களில் செய்யாறு - கிளியாறு, கெப்ண்டன்யா, பொய்னி, கொசஸ்தலையாறு, கூவம், அடையாறு, ஆரணியாறு, கெடிலம், கோமுகநதி, நல்லூர், வராகநதி, பாம்பார், திருக்கோவிலூர், துறிஞ்சலாறு, வரட்டாறு - திருக்கோவிலூர், ஓங்கூர் ஆகிய உபவடி நிலப் பகுதிகளில் இத்திட்டத்தினால், பயனடையும் கிராமங்களில் இப்பிரசாரம் செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதற்காக 2 பிரசார ஊர்திகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

இதில் ஒரு ஊர்தி 33 நாள்கள் வீதம் மொத்தம் 66 நாள்கள் 306 கிராமங்களில் தொழில்நுட்ப பிரசாரத்தில் ஈடுபடும்.

அதன்படி காஞ்சிபுரம் மாவட்டத்தில் இப்பிரசார ஊர்திப் பயணத்தை மாவட்ட ஆட்சியர் கா. பாஸ்கரன் தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில், வேளாண்துறை இணை இயக்குநர் செப்ந்தரராஜன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## நீலநாக்கு நோய் தடுப்புப் பயிற்சி

திருப்பத்தூர் தாலுகா அலுவலகத்தில் கால்நடைகளுக்கான நீலநாக்கு நோய் தடுப்பு முறை குறித்த பயிற்சி நடைபெற்றது.

திருப்பத்தூர் தாலுகா அலுவலகத்தில் நடைபெற்ற இப்பயிற்சிக்கு தேவகோட்டை கோட்டாட்சியர் கணேசன் தலைமை வகித்தார். வட்டாட்சியர் ஜெயராமன் முன்னிலை வகித்தார். பயிற்றுநராக கலந்து கொண்ட கால்நடை மருத்துவ அலுவலர் மாசிலாமணி செம்மறி ஆடு மற்றும் கால்நடைகளுக்கான நீலநாக்கு நோய் தடுப்பு முறை மேலும் நோய் அறிதல் குறித்து பயிற்சி வழங்கினார்.

கால்நடைகள் நோய்வாய்ப் பட்டிருப்பின் பராமரிக்க வேண்டிய பதிவேடுகள் குறித்தும் விளக்கினார். கிராம நிர்வாக அலுவலர்கள், வருவாய் ஆய்வாளர்கள், துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் (கிராம பஞ்சாயத்து) விவசாயிகளிடம் கால்நடை நோய்கள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்பட்டது. இறக்கும் கால்நடைகள் குறித்து முறையான பதிவுகள் செய்ய அறிவுறுத்தப்பட்டது.

திருப்பத்தூர் மண்டல துணை வட்டாட்சியர், வட்டார வளர்ச்சி துணை அலுவலர்கள், கிராம நிர்வாக அலுவலர்கள், வருவாய் ஆய்வாளர்கள் பயிற்சியில் கலந்து கொண்டனர்.

## மேலூர் ஒரு போக சாகுபடிக்கு தண்ணீர் திறக்கப்படுமா?: உயர்நீதிமன்றம் இன்று தீர்ப்பு

மேலூர் ஒரு போக சாகுபடிக்கு தண்ணீர் திறப்பது குறித்து உயர் நீதிமன்றம் இன்று தீர்ப்பு அளிக்க உள்ளது.

மேலூர் ஒரு போக சாகுபடி பகுதிகளில் கதிர்விடும் நிலையில் உள்ள நெற்பயிர்களுக்கு 5 நாள்களுக்கு தண்ணீர் திறக்க உத்தரவிடுமாறு வழக்குரைஞர் திருமேனி தாக்கல் செய்த மனு, சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளையில் செவ்வாய்க்கிழமை நீதிபதிகள் ஆர்.சுதாகர், வி.எம்.வேலுமணி ஆகியோர் அடங்கிய அமர்வு முன்பு விசாரிக்கப்பட்டது.

அப்போது நீதிமன்ற உத்தரவின்படி, ஆயக்கட்டு பகுதிகளுக்கான நீர் பங்கீடு குறித்த அட்டவணையை அரசு கூடுதல் தலைமை வழக்குரைஞர் செல்லப்பாண்டியன் தாக்கல் செய்தார்.

பெரியாறு அணையில் இருந்தும் வைகை அணையில் இருந்தும் மேலூர் ஒரு போக சாகுபடிக்கு தண்ணீர் திறக்க இயலாது. அப்படித் திறந்தால் குடிநீர் பிரச்னை ஏற்படும் என அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

அப்போது, கம்பம் ஒரு போக சாகுடிக்கு 100 சதவீதம் தண்ணீர் விடும் போது, மதுரை பகுதி ஒரு போக சாகுபடிக்கு மட்டும் 27 சதவீதம் தண்ணீர் திறப்பது ஏன் என நீதிபதி ஆர்.சுதாகர் கேள்வி எழுப்பினார். அதற்கு அரசுத்தரப்பு வழக்குரைஞர், இவ்வளவு தண்ணீர் தான் திறக்க வேண்டும் என அரசு உத்தரவு ஏதுமில்லை என்றார். இதையடுத்து வைகை அணையில் உள்ள நீரை பாசனத்துக்கு திறந்து விடுங்கள். பின்னர் பெரியாறு அணையில் இருந்து திறந்து சரி செய்து கொள்ளுங்கள் என நீதிபதி யோசனை தெரிவித்தார். அதையும் அரசுத்தரப்பு வழக்குரைஞர் ஏற்கவில்லை. இதையடுத்து தீர்ப்பு புதன்கிழமைக்கு ஒத்திவைக்கப்பட்டது.

முன்னதாக, அரசு தலைமைச் செயலர் மீதான நீதிமன்ற அவமதிப்பு மனு விசாரணைக்கு வந்த போது, வெள்ளிக்கிழமை பிறப்பித்த உத்தரவு நகல் அரசுக்கு கிடைக்கவில்லை. மேலும் சனிக்கிழமை கூட்டம் நடத்துவது இயலாத காரியம் என்றும் அரசு வழக்குரைஞர் தெரிவித்தார். அப்போது உத்தரவு நகல் வெள்ளிக்கிழமை இரவு பதிவாளர் அலுவலகத்தில் இருந்து அனுப்பிவைக்கப்பட்டதாகவும் மனுதாரர் சார்பிலும் தகவல் அனுப்பப்பட்டுள்ளது என நீதிபதி ஆர்.சுதாகர் தெரிவித்தார். விசாரணை ஒத்திவைக்கப்பட்டது.

நீதிமன்ற அவமதிப்பு கோரும் மனுவில் அமைச்சர்களின் பினாமி நிலம் என குறிப்பிட்டுள்ளதை வாபஸ்பெறவேண்டும் அல்லது யார் என தெரிவிக்க வேண்டும் என அரசு வழக்குரைஞர் கோரினார். இதற்கு மனுதாரர் தரப்பில் பொதுப்பணித்துறை அமைச்சர் என தெரிவித்தனர். இதையடுத்து அதற்கான ஆதாரம் அளித்தால் விசாரிக்கப்படும் என அரசு வழக்குரைஞர் தெரிவித்தார்.

## குறைதீர் கூட்டத்தில் விவசாயிகள் வெளிநடப்பு

கரும்பு விலை உயர்வு ஏமாற்றம் அளிப்பதாகக் கூறி, திருவண்ணாமலையில் நடைபெற்ற தாலுகா அளவிலான குறைதீர் கூட்டத்தைப் புறக்கணித்து விவசாயிகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

திருவண்ணாமலை தாலுகா அளவிலான விவசாயிகள் குறைதீர் கூட்டம், செவ்வாய்க்கிழமை தாலுகா அலுவலகத்தில் நடைபெற்றது. கூட்டத்துக்கு, கோட்டாட்சியர் கோ.முத்துக்குமாரசாமி தலைமை வகித்தார். வட்டாட்சியர் வேடியப்பன், சமூக பாதுகாப்பு திட்ட வட்டாட்சியர் காமராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் பேசிய விவசாயிகள், புதிய குடும்ப அட்டை கேட்டு 2010-ல் கொடுத்த மனு மீது இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை. ஆனால், ரூ.1000 கொடுத்தால் உடனடியாக ரேஷன் கார்டு கிடைக்கிறது. இதுபோன்ற முறைகேடுகளைக் கண்காணிக்க வேண்டும். முன்னுரிமை அடிப்படையில் ரேஷன் கார்டுகளை வழங்க வேண்டும் என்றனர்.

தொடர்ந்து, கரும்பு விலையை உயர்த்திய தமிழக அரசுக்கு நன்றி தெரிவித்து விவசாயி ஒருவர் பேசினார். அப்போது குறுக்கிட்டுப் பேசிய தமிழக விவசாயிகள் சங்கத்தினர் கரும்பு விலை உயர்வு விவசாயிகளுக்கு ஏமாற்றம் அளிப்பதாகவே இருக்கிறது. எனவே, வெளிநடப்பு செய்கிறோம் என்று கூறிவிட்டு வெளிநடப்பு செய்தனர். தொடர்ந்து, வட்டாட்சியர் அலுவலகம் எதிரே கரும்புப் பயிருடன் நின்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

செங்கத்தில்...

செங்கத்தில் நடைபெற்ற கூட்டத்துக்கு மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (நிலம்) ஆர்.மல்லிகா தலைமை வகித்தார். வட்டாட்சியர் ராஜலட்சுமி வரவேற்றார். கூட்டத்தில் விவசாயிகள் கலந்துகொண்டு பேசியதாவது:

செங்கம் நகரில் உள்ள துக்காப்பேட்டை, தளவாநாய்க்கன்பேட்டை, திருவள்ளுவர் நகரில் உள்ள குளங்களை தூர்வாரி சரி செய்ய வேண்டும், கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கம் மூலம் கடந்த 2010 முதல் 2012 வரை அரசு வழங்கிய

போனஸ் தொகை இதுவரை வழங்கப்படாமல் உள்ளது. அதை விவசாயிகளுக்கு உடனடியாக வழங்க அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும். நீர் நிலை பகுதியில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டும் என்பன உள்பட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி விவசாயிகள் பேசினர்.

சமூகப் பாதுகாப்பு வட்டாட்சியர் முருகன், வட்ட வழங்கல் அலுவலர் நித்யானந்தம் உள்பட அரசு அதிகாரிகள், விவசாயிகள் பலர் கலந்துகொண்டனர்.

செய்யாறில்...

செய்யாறில் விவசாயிகள் சங்கம் சார்பில் கரும்புக்கு மதிப்பூட்டு விலையை அறிவிக்கக் கோரி கரும்பு காவடி எடுத்து நூதன ஆர்ப்பாட்டத்தைச் செய்ததுடன், வறட்சி நிவாரணம் வழங்கக் கோரி விவசாய குறைதீர் கூட்டத்தில் வெளிநடப்பு செய்து தங்கள் எதிர்ப்பைத் தெரிவித்தனர்.

செய்யாறு கோட்டாட்சியர் அலுவலகம் முன்பு நடைபெற்ற நூதன ஆர்ப்பாட்டத்துக்கு மாவட்ட ஒருங்கிணைப்பாளர் வாக்கடை புருஷோத்தமன் தலைமை தாங்க, வட்டார ஒருங்கிணைப்பாளர் எஸ்.ரகுபதி முன்னிலை வகித்தார்.

கேஸ், பெட்ரோல், டீசல் விலை உயர்வை 50 சதவீதம் கட்டுப்படுத்தி, 150 கிலோ சர்க்கரை முழுவதும் மலிவு விலையில் வழங்க வேண்டும் என வலியுறுத்தி கரும்புக் காவடியை எடுத்துச் சென்றனர்.

வெளிநடப்பு

செய்யாறு கோட்டாட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற விவசாயிகள் குறைதீர் கூட்டத்துக்கு கோட்டாட்சியர் எஸ்.சாந்தா தலைமைத் தாங்கினார். கூட்டத்தில் பங்கேற்க வந்த விவசாயிகள் ஒட்டு மொத்தமாக வெளிநடப்பு செய்தனர்.

அப்போது விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணம் வழங்கக் கோரியும், கரும்புக்கு மதிப்பூட்டிய விலையை நிர்ணயிக்கக் கோரி வெளிநடப்பு செய்வதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

### பால் கொள்முதல் அளவை உயர்த்த உற்பத்தியாளர்கள் முடிவு

பால் கொள்முதல் அளவை 1.65 லட்சம் லிட்டராக உயர்த்த வேண்டும் என, கிருஷ்ணகிரியில் திங்கள்கிழமை நடைபெற்ற கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்க நிர்வாகிகள் கலந்தாய்வுக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

தருமபுரி மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தின் சார்பில், கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கத் தலைவர்கள், செயலாளர்கள் பங்கேற்ற கலந்தாய்வுக் கூட்டம் கிருஷ்ணகிரியில் திங்கள்கிழமை நடைபெற்றது.

கூட்டத்துக்கு தருமபுரி மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தின் தலைவர் தென்னரசு தலைமை வகித்தார். பொதுமேலாளர் கே.கொம்பையன், துணைப் பதிவாளர் தனபால் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

கூட்டத்தில், பால் கொள்முதல் விலையை உயர்த்தியதற்கு தமிழக முதல்வருக்கு நன்றி தெரிவிக்கப்பட்டது. அரசின் சார்பில், கால்நடைகளுக்கு அளிக்கப்படும் இலவச மருத்துவம், ரூ.4 மானிய விலையில் கால்நடைகளுக்கு தீவனம் வழங்குவது போன்ற நன்மைத் தரும் திட்டங்களை விவசாயிகளுக்கு  எடுத்துச் சொல்வதுடன், தினசரி பால் கொள்முதல் அளவை 1.25 லட்சம் லிட்டலிருந்து 1.65 லட்சம் லிட்டராக உயர்த்துவது என முடிவு செய்யப்பட்டது.

### விவசாயிகளுக்கு வேளாண் கருவிகள்

கரூரில் 13 விவசாயிகளுக்கு ரூ. 17 லட்சத்தில் வேளாண் கருவிகளை மாவட்ட ஆட்சியர் ச. ஜெயந்தி செவ்வாய்க்கிழமை வழங்கினார்.

கரூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் வேளாண்மை பொறியியல் துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சிக்கு தலைமை வகித்து விவசாயிகளுக்கு வேளாண் கருவிகளை வழங்கி, மாவட்ட ஆட்சியர் பேசியது:

வேளாண் பொறியியல் துறை மற்றும் தோட்டக்கலைத் துறை சார்பில் உற்பத்தி பொருள்கள் இரண்டு மடங்கு அதிகரிக்கும் வகையில் விவசாயிகளுக்கு வேளாண் கருவிகள் மற்றும் உபகரணங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

நிகழாண்டில் ஆதிதிராவிட விவசாயிகளுக்கு ரூ. 10.10 லட்சம் மானியத்திலும், மற்ற விவசாயிகளுக்கு ரூ. 55.35 லட்சம் மானியத்தில் 128 கருவிகள் வாங்கப்பட உள்ளன. இதன்மூலம் விவசாயிகள் தங்களின் வேலையாட்கள் மற்றும் பணச் செலவை குறைத்து குறைந்த காலத்தில் அதிக வருமானம் பெற்று தங்களின் பொருளாதார நிலையை உயர்த்திக் கொள்ளலாம் என்றார்.

நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண் துறை) ராஜேந்திரன், செயற்பொறியாளர் சங்கரன், உதவி செயற்பொறியாளர்கள் அறிவழகன், தேவதாஸ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

### பயிர்க் காப்பீடு இழப்பீட்டை முழுமையாக வழங்கக் கோரி மறியல்

பயிர்க் காப்பீடு இழப்பீட்டுத் தொகையில் பிடித்தம் செய்யாமல், முழுமையாக விவசாயிகளுக்கு வழங்கக் கோரி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் சார்பில், நாகை மாவட்டம், கீழையூரில் செவ்வாய்க்கிழமை சாலை மறியல் போராட்டம் நடைபெற்றது.

2012- 13-ம் ஆண்டுக்கான பயிர்க் காப்பீடு இழப்பீட்டுத் தொகையை விவசாயிகளுக்கு முழுமையாக வழங்க வேண்டும். ஊரக வேலை உறுதித் திட்டத்தில் 150 நாள் பணி வழங்க வேண்டும். சூறை நோய், மஞ்சள் நோய் பாதிப்புக்குள்ளான பகுதிகளில் விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்க வேண்டும்.

2012-13-ம் ஆண்டின் பயிர்க் காப்பீடு தொகைக்கான பிரிமியத்தை அரசு ஏற்ற நிலையில், விவசாயிகள் செலுத்திய பயிர்க் காப்பீடு பிரிமியத் தொகையை விவசாயிகளுக்குத் திரும்ப வழங்க வேண்டும். கோமாரி நோயால் இறந்த கால்நடைகளுக்கு உரிய இழப்பீடு வழங்க வேண்டும் என்ற கோரிக்கைகளை வலியுறுத்தி இந்த மறியல் போராட்டம் நடைபெற்றது. கீழையூர் மேலப்பிடாகையில் நடைபெற்ற இந்த மறியல் போராட்டத்துக்கு, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் ஒன்றியச் செயலாளர் டி. செல்வம் தலைமை வகித்தார்.

சட்டப்பேரவை முன்னாள் உறுப்பினர் வி. தம்புசாமி, விவசாயத் தொழிலாளர் சங்க மாவட்டத் துணைச் செயலாளர் அ. நாகராஜன், விவசாயிகள் சங்க மாவட்டத்

துணைச் செயலாளர் கே. சீனிவாசன் ஆகியோர் கோரிக்கைகளை வலியுறுத்திப் பேசினர்.விவசாயத் தொழிலாளர் ஒன்றியச் செயலாளர் வி. சுப்பிரமணியன், இளைஞர் பெருமன்ற ஒன்றியச் செயலாளர் ஏ.வி. பாலசுப்பிரமணியன் உள்ளிட்டோர் பங்கேற்றனர். மழையில் நடைபெற்ற மறியல்: பலத்த மழை பெய்து கொண்டிருந்த நிலையில், இந்த மறியல் போராட்டம் நடைபெற்றது. இதனால், நாகை- திருத்துறைப்பூண்டி சாலையில் சுமார் ஒரு மணி நேரம் போக்குவரத்து தடைபட்டது. திருக்குவளை வட்டாட்சியர் கண்ணன் பேச்சுவார்த்தை மேற்கொண்டார். மறியலில் ஈடுபட்ட 80 பேரை கீழையூர் போலீஸார் கைது செய்தனர். பயிர்க் காப்பீடு இழப்பீட்டை முழுமையாக வழங்கக் கோரி மறியல்

### கரும்பு விவசாயிகள் ஆர்ப்பாட்டம்

ஒரு டன் கரும்புக்கு ரூ. 4000 வழங்க வேண்டும் என்பது உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி, மன்னார்குடியில் தமிழ்நாடு கரும்பு விவசாயிகள் சங்கம் சார்பில் செவ்வாய்க்கிழமை ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

கோரிக்கைகள்: முத்தரப்பு கூட்டத்தை உனடியாகக் கூட்ட வேண்டும். மத்தியஅரசு சர்க்கரை இறக்குமதியை தடை செய்ய வேண்டும். இறக்குமதிக்கான வரியை 40 சதவீதமாக உயர்த்த வேண்டும்.

எத்தனாலை அரசு கொள்முதல் செய்ய வேண்டும். ரங்கராஜன் குழு பரிந்துரையை அமல்படுத்தக் கூடாது. வெட்டுகூலியை ஆலை நிர்வாகம் ஏற்கவேண்டும். கூட்டுறவு ஆலைகளை சீரமைக்க வேண்டும்.

கோட்டாட்சியர் அலுவலகம் முன் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு எஸ். தம்புசாமி தலைமை வகித்தார். பி.எம். காதர்உசேன் முன்னிலை வகித்தார்.

விவசாய சங்க மாவட்டச் செயலர் ஜி. சுந்தரமூர்த்தி, கே.எம். அக்பர்தீன், தென்னை சங்க மாவட்டச் செயலர் கே. சுப்பிரமணியன், பால் உற்பத்தியாளர் சங்க நிர்வாகி ஜி. ரகுபதி ஆகியோர் கோரிக்கைகளை விளக்கிப் பேசினர்.

இதில் தஞ்சை, திருவாரூர் மாவட்டங்களைச் சேர்ந்த கரும்பு விவசாயிகள் பங்கேற்றனர்.

### தரமற்ற விதைகளால் சம்பா பயிரில் நோய் தாக்குதல்

தனியார் விதை நிறுவனங்கள் வழங்கிய தரமற்ற விதைகளால் நிகழாண்டு சம்பாவில் நோய்த் தாக்குதல் அதிகமாகியுள்ளது என மாவட்ட ஊராட்சிக் குழுக் கூட்டத்தில் உறுப்பினர் புகார் தெரிவித்தார்.

திருவாரூரில் மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் ஜெயலட்சுமி அம்பிகாபதி தலைமையில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற கூட்டத்தில் உறுப்பினர்கள் பேசியது:

மாவட்ட ஊராட்சித் தலைவர்: தமிழக அரசின் திட்டங்கள் அனைத்தும் முழுமையாக மாவட்டத்தில் கொண்டு சேர்க்கப்பட்டுள்ளது. வளர்ச்சித் திட்டங்களை பிப்ரவரி மாதத்துக்குள் முடிக்க வட்டார வளர்ச்சி அலுவலர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். அறுவடை காலம் என்பதால், பாசனக் கால்வாய்களில் இருக்கும் நீரை பாதுகாக்கும் வகையில் மோட்டார் மூலம் அருகிலுள்ள குளங்களில் சேமிக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

கே. கலைவாணன் (திமுக): கூட்டத்தில் சிறப்புத் தீர்மானங்கள் எதுவும் நிறைவேற்றுவதில்லை. மக்களின் கோரிக்கை குறித்து உறுப்பினர்களின் பேச்சுக்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறதா, இல்லையா என்று அறிந்துகொள்ள முடியவில்லை. நடவடிக்கை குறித்து உறுப்பினர்களுக்கு தகவல் தெரிவிக்க வேண்டும். திருத்துறைப்பூண்டி, முத்துப்பேட்டை, மன்னார்குடி, கோட்டூர் உள்ளிட்ட பகுதிகளில் அதிகளவு சம்பாவில் நெல்பழம் மற்றும் மஞ்சள் நோய்த் தாக்குதல் அதிகமாகி மகசூல் பாதிக்கப்பட்டுள்ளது. நெற்பழம் பாதித்த நெல்லை கொள்முதல் நிலையங்களில் கொள்முதல் செய்ய மறுக்கிறார்கள்.

இதுகுறித்து மாவட்ட நிர்வாகமும், வேளாண் துறையும் இணைந்து கூட்டு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். நெல்பழ நோயால் பாதிக்கப்பட்ட மகசூல் இழப்புக்கு அரசு நிவாரணம் வழங்க வேண்டும்.

கே. லோகநாதன் (அதிமுக): நீடாமங்கலம் மூணாறு தலைப்பை சுற்றுலா தளமாக அறிவித்து நிதி ஒதுக்கிய முதல்வர் ஜெயலலிதாவுக்கு நன்றி. சம்பாவில் நெற்பழம்

மற்றும் மஞ்சள் நோய்த் தாக்குதலுக்கான காரணங்களை வேளாண் துறையினர் கண்டறிய வேண்டும். முருகையன் (இந்திய கம்யூ.): 100 நாள் வேலை திட்டத்தில் தொழிலாளர்களுக்கு உரிய காலத்தில் கூலி வழங்கவதில்லை. கணினி கோளாறு காரணமாக கூலி வழங்குவது தாமதமாகிறது என்று ஊராட்சி நிர்வாகம் கூறும் பதில் ஏற்புடையதாக இல்லை.

தனியார் விதை நிறுவனங்கள் வழங்கிய தரமற்ற விதைகளால், நிகழாண்டு சம்பாவில் நெற்பழம், மஞ்சள் நோய்த் தாக்குதல் அதிகமாகியுள்ளது. இதை வருங்காலங்களில் தடுக்க வேண்டும். கொள்முதல் நிலையங்களுக்கு தேவையான நிதி வழங்க வேண்டும். குடும்ப அட்டை வழங்குவதில் பாரபட்சம் காட்டப்படுவதைத் தடுக்க வேண்டும்.

ரா. தமிழ்ச்செல்வி (இந்திய கம்யூ.): விவசாயிகள் கொண்டுவரும் அனைத்து நெல்லையும் நேரடி நெல்கொள்முதல் நிலையங்களில் கொள்முதல் செய்ய வேண்டும்.

வேளாண் உதவி இயக்குநர் (தரக்கட்டுப்பாடு) பாலசுப்பிரமணியம்: சம்பா, தாளடியில் களை, நெல்பழம், மாவுபூச்சி ஆகிய மூன்றுவிதமான பிரச்னைகளை நிகழாண்டு சந்திக்க வேண்டியிருந்தது. முன்கூட்டியே நிதி ஒதுக்கி களைக்கட்டுப்பாடு செய்யப்பட்டது. இதேபோல, மஞ்சள் நோய்த் தாக்குதலும் தடுக்கப்பட்டது. நீர்ப்பற்றாக்குறையின் காரணமாக மஞ்சள் நோய்த்தாக்குதல் அதிகரித்துள்ளது. நெற்பழம் நோய் காற்று மூலம் வேகமாக பரவுக்கூடியது. விதை நேர்த்தி செய்யப்பட்ட விதைகள் தெளித்த வயல்களில் எந்தநோயும் தாக்கவில்லை. விளைச்சல் அதிகம் இருக்கும்போது இந்த நோய்த்தாக்குதல் அதிகம் இருக்கும் என்பது பொதுவான கருத்து.

கூட்டத்தில் மாவட்ட ஊராட்சி துணைத் தலைவர் இளவரசி, மாவட்ட ஊராட்சி செயலர் ராஜகோபால் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

முன்னதாக, மறைந்த இயற்கை வேளாண் விஞ்ஞானி கோ. நம்மாழ்வாருக்கு கூட்டத்தில் மவுன அஞ்சலி செலுத்தப்பட்டது.

## திருவாரூர்: 147 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறப்பு

திருவாரூர் மாவட்டத்தில் சம்பா நெல் கொள்முதல் செய்ய ஏற்கெனவே உள்ள நெல் கொள்முதல் நிலையங்களுடன், கூடுதலாக 147 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன என மாவட்ட ஆட்சியர் சி. நடராசன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:

மாவட்டத்தில் குறுவை பருவத்தில் 78, சம்பாவில் 174 நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு, இதுவரை 24,232 மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. தற்போது 147 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு ஜன. 6 முதல் செயல்பாட்டுக்கு வந்துள்ளன.

மாவட்டத்தில், வட்டம் வாரியாக திருவாரூர் 16, நன்னிலம் 17, குடவாசல் 26, வலங்கைமான் 21, மன்னார்குடி 26, நீடாமங்கலம் 12, திருத்துறைப்பூண்டி 26 என மொத்தம் 147 நேரடி நெல்கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன.

விவசாயிகள் தங்களது நெல்லை அருகிலுள்ள கொள்முதல் நிலையங்களில் கொடுத்து அதற்கான தொகையைப் பெற்றுக் கொள்ளலாம்.

## குமரி மாவட்டத்தில் மழை

கன்னியாகுமரி மாவட்டத்தில் செவ்வாய்க்கிழமை மாலையில் மழைத் தூறலும், இரவில் மிதமான மழையும் பெய்தது.

மாவட்டத்தில் கடந்த 2 நாள்களாக வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டது. இரவு நேரத்தில் பனிப்பொழிவும் இருந்தது. செவ்வாய்க்கிழமை காலை நாகர்கோவில், சுசீந்திரம் உள்ளிட்ட பகுதிகளில் மழைத் தூறல் காணப்பட்டது.

இந்நிலையில் மாலை வரை அவ்வப்போது இருந்த  மழைத் தூறல், இரவு 8 மணிக்கு மேல் மிதமான மழையாகப் பெய்தது. மாவட்டத்தில் கடலோரப் பகுதிகளில் பலத்த காற்று வீசி வருகிறது. கடல் அலைகள் சீற்றத்துடன் காணப்பட்டன

## வேளாண் இயந்திரங்கள்: 20-ல் விவசாயிகளுக்கு பயிற்சி

சிதம்பரம் பகுதி விவசாயிகளுக்கு, மேம்படுத்தப்பட்ட வேளாண் இயந்திரங்களை இயக்குவது குறித்த பயிற்சி மற்றும் நெல் சாகுபடிக்கான வேளாண் கருவிகள் குறித்த பயிற்சி வருகிற 20-ம் தேதி தொடங்கி 30-ம் தேதி வரை நடைபெறுகிறது.

இதுகுறித்து சிதம்பரம் வேளாண் (பொறியியல் துறை) உதவி செயற்பொறியாளர் ரெ.குணசேகரன் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

சிதம்பரம், காட்டுமன்னார்கோவில் பகுதி விவசாயிகளுக்கான மேம்படுத்தப்பட்ட வேளாண் இயந்திரங்கள், தேர்வு, செயல்பாடு, பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு குறித்த பயிற்சியும், நெல் சாகுபடியில் வேளாண் இயந்திரங்கள் தொகுப்பு குறித்த பயிற்சியும் சிதம்பரம் பள்ளிப்படை பூதகேணியில் உள்ள உதவி செயற்பொறியாளர் அலுவலக வளாகத்தில் ஜனவரி 20 முதல் 30-ம் தேதி வரை நடைபெறுகிறது.

பயிற்சியில் சிறு, குறு விவசாயிகள் மற்றும் ஊரக வேலைவாய்ப்பற்ற விவசாயம் செய்யும் இளைஞர்கள் பங்கேற்கலாம். விவசாயிகள் ஏதேனும் சொந்தமாக இயந்திரங்கள் மற்றும் வேளாண் கருவிகள் வைத்திருக்க வேண்டும். பயிற்சியில் பங்கேற்க விரும்பும் விவசாயிகளின் வயது வரம்பு 18 முதல் 40-க்குள் இருக்க வேண்டும்.

விவசாயிகள் வரும் ஜனவரி 10-ஆம் தேதிக்குள் சிதம்பரம் அலுவலகத்தை அணுகி முன்பதிவு செய்து கொள்ள வேண்டும். ஒவ்வொரு பயிற்சிக்கும் 20 நபர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவதால் முன்பதிவு செய்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மவுசு குறைந்து வரும் "லூம்வேர்ல்டு'?



காஞ்சிபுரம் லூம்வேர்ல்டு எனப்படும் பட்டு வளாகம் ஆரம்பிக்கப்பட்ட 10 ஆண்டுகளில் 17 பட்டுக் கூட்டுறவுச் சங்கங்கள் கடை நடத்த முடியாமல் காலி செய்துவிட்டன.

பட்டுப் புடவைகளுக்கு பெயர் பெற்ற காஞ்சிபுரத்தில், காஞ்சிபுரம் பட்டுக் கூட்டுறவுச் சங்கம் முதல்முதலாக ஆரம்பிக்கப்பட்டது.

இப்போது காமாட்சியம்மன் பட்டுக் கூட்டுறவுச் சங்கம், அறிஞர் அண்ணா பட்டுக் கூட்டுறவுச் சங்கம், முருகன் பட்டுக் கூட்டுறவுச் சங்கம் என 23 பட்டுக் கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கி வருகின்றன.

இக்கூட்டுறவுச் சங்கங்கள் காஞ்சிபுரத்தில் காந்தி சாலை, காமராஜர் சாலை உள்ளிட்ட பகுதிகளிலும் தமிழகத்தில் சென்னை, மதுரை, கோவை, திருச்சி உள்ளிட்ட பல்வேறு பகுதிகளிலும் விற்பனை மையத்தைத் தொடங்கி செயல்படுத்தி வருகின்றன.

இருந்த போதிலும், விழாக்காலங்களில் குறிப்பாக சுபமுகூர்த்த காலங்களில் காஞ்சிபுரத்துக்கு வந்து பட்டுப்புடவைகளை வாங்குவதை பெருமையாக கருதுகின்றனர்.

மேலும் காஞ்சிபுரத்துக்கு நேரில் வந்து பட்டுப்புடவை வாங்கினால், நல்ல தரமானதாகவும், நியாயமான விலையிலும் கிடைக்கும் என்பது மக்களின் நம்பிக்கை. ஆனால் அந்த நம்பிக்கை புரோக்கர்களால் பாதிக்கப்பட்டது.

மேலும் பட்டுக் கூட்டுறவுச் சங்கங்கள் ஒரே இடத்தில், கடைகளை நடத்தினால், பொதுமக்கள் அலையாமல், அனைத்து பட்டுக் கூட்டுறவு சங்க புடவைகளையும் பார்வையிட்டு, தங்களது ரசனைக்கேற்ப புடவைகளை எடுத்துச் செல்ல வசதியாக இருக்கும் என்ற கோரிக்கை எழுந்தது.

இதைத் தொடர்ந்து காஞ்சிபுரம் காமராஜர் சாலையில் அறிஞர் அண்ணா பட்டுக் கூட்டுறவு விற்பனை வளாகம் (லூம்வேர்ல்டு) அமைக்க கடந்த 2000-ஆம் ஆண்டு அடிக்கல் நாட்டப்பட்டது.

இதைத் தொடர்ந்து இந்த வளாகத்துக்கு 2003 பிப்ரவரி 7-ஆம் தேதி திறப்பு விழா நடைபெற்று, பிப்ரவரி 8-ஆம் தேதி முதல் இந்த வளாகம் செயல்படத் தொடங்கியது. அறிஞர் அண்ணா, முருகன், மாமல்லன், காஞ்சி, கலைஞர் கருணாநிதி, பல்லவர், வள்ளலார், வி.பி. சித்தன், திருவள்ளுவர், சி.வி.எம். அண்ணாமலை, பாரதியார், பெரியார் ஈ.வெ.ரா., சத்தியமூர்த்தி, வைகோ, வரதராஜ சுவாமி, ஜெயலலிதா, ஜயேந்திரர், காமாட்சியம்மன், ஆரணி, சேலம் ஆகிய பட்டுக் கூட்டுறவு சங்கங்கள், கிருஷ்ணா மார்க்கெட்டிங், காட்டன் கலெக்ஷன் என மொத்தம் 24 விற்பனை மையங்கள் ஒரே இடத்தில் ஆரம்பிக்கப்பட்டன.

இது தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து வரும் மக்களுக்கு மட்டும் இல்லாமல், நாட்டின் பல்வேறு பகுதி, பல்வேறு நாடுகளில் இருந்து வரும் சுற்றுலாப் பயணிகளுக்கும் பட்டுப்புடவைகளை தேர்ந்தெடுத்து வாங்க வசதியாக இருந்தது.

மேலும் பொங்கல், தீபாவளி உள்ளிட்ட முக்கிய பண்டிகை காலங்களில் பட்டு மற்றும் கைத்தறி விற்பனைக் கண்காட்சிகள் நடைபெற்று வந்தன. இது அனைத்து தரப்பு மக்களிடையே நல்ல வரவேற்பை பெற்றது.

இந்நிலையில் கடந்த ஓராண்டுக்கு மேலாக அறிஞர் அண்ணா, முருகன், மாமல்லன், காஞ்சி, கலைஞர் கருணாநிதி ஆகிய 5 சங்கங்களைத் தவிர மற்ற சங்கங்கள் இவ்வளாகத்தை காலி செய்து விட்டு சென்றுவிட்டன.

இதனால், பட்டுப்புடவை எடுக்க வரும் பொதுமக்கள் இப்போது மீண்டும் புரோக்கர்கள் வலையில் சிக்க வேண்டிய பரிதாப நிலை ஏற்பட்டுள்ளது.

இது குறித்து பட்டுக் கூட்டுறவுச் சங்கத்தினர் சிலர் கூறியது: "பட்டு நூல், ஜரிகை உள்ளிட்டவைகளின் விலை பன்மடங்கு உயர்ந்துவிட்டது. இதனால் குறிப்பிட்ட சில சங்கங்களைத் தவிர மற்ற சங்கங்கள் நலிவடைந்துவிட்டன. தனியார் ஒரு சேலைக்கு ரூ. 1,000 முதல் ரூ. 1,500 கொடுக்கும் நிலை உள்ளது.

ஆனால் பட்டுக் கூட்டுறவுச் சங்கங்கள் தங்களது உறுப்பினர்களுக்கு ஒரு சேலைக்கு ரூ.2,500 வரை கொடுக்க வேண்டியுள்ளது. இதனால் பட்டுப் புடவைகளின் விலை அதிகரிக்கிறது. ஆனால் தனியார்கள் தரமற்ற ஜரிகை, பட்டு நூலைக் கொண்டு தயாரிக்கும் சேலைகளை மிகக் குறைந்த விலைக்கு தர தயாராக உள்ளனர்.

இதனால் பொதுமக்களும் தனியார் நிறுவனங்களை நாடுவதைத்தான் விரும்புகின்றனர். இதனால் லூம்வேர்ல்டில் செயல்பட்ட சங்கங்களில் போதிய தயாரிப்பு இல்லாததால், விற்பனை மையத்துக்கு தேவையற்று வாடகை செலுத்த வேண்டிய சூழல் ஏற்பட்டது.

எனவே வேறு வழியின்றி கடையை காலி செய்ய வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டது. தமிழக அரசு கூட்டுறவுச் சங்கங்களை ஊக்குவிக்கும் வகையில் தரமான பட்டு, ஜரிகைகளை குறைந்த விலைக்கு கிடைக்கச் செய்ய வேண்டும்' என்றனர்.

அனைத்து புடவைகளும் ஒரே இடத்தில் கிடைக்கும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்ட "லூம்வேர்ல்டு' வளாகம் படிப்படியாக மவுசு குறைந்து வருகிறது. எனவே இந்த நிலையை மாற்ற அரசு நடவடிக்கை மேற்கொண்டால் பட்டு நெசவாளர்கள் வாழ்வு வளம் பெறும். பொதுமக்களும் தரமுள்ள பட்டுப் புடவைகளை வாங்கிச் செல்வர் என்பதே கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் பொதுமக்களின் கோரிக்கையாகும்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

தென் கடலோர பகுதிகளில் கனமழைக்கு வாய்ப்பு:வானிலை ஆய்வு மையம் அறிவிப்பு

சென்னை:"தென் கடலோர மாவட்டங்கள், டெல்டா பகுதிகளில் கனமழை பெய்யக் கூடும்; கடல் கொந்தளிப்புடன் இருக்கக் கூடும். எனவே, தென் கடலோர மீனவர்கள், கடலுக்குள் செல்ல வேண்டாம்," என, சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர், ரமணன் தெரிவித்துள்ளார்.மேலடுக்கு சுழற்சி:தென்மேற்கு வங்கக் கடலில் உருவாகி, இலங்கை அருகில் நிலை கொண்டிருந்த, காற்றழுத்த தாழ்வு மண்டலம், நேற்று முன்தினம் காலை, இலங்கையின் கிழக்கு கடற்பகுதியில், கரையை கடந்தது.தொடர்ந்து, அன்று இரவு வலு குறைந்து, இலங்கை மற்றும் மன்னர் வளைகுடா இடையில், காற்று மேலடுக்கு சுழற்சியுடன் இணைந்து நிலை கொண்டுள்ளது. இது, தொடர்ந்து மேற்கு நோக்கி நகர்ந்து, அடுத்த, 48 மணி நேரத்தில், வலு குறைந்து, குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதியாக மாறும் என, வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.இந்த நிகழ்வுகளின் காரணமாக, தமிழகத்தில், டெல்டா மற்றும் தென் கடலோர மாவட்டங்களில் மழை பெய்து வருகிறது.

இதுகுறித்து, சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர், ரமணன் கூறியதாவது:

அடுத்த, 24 மணி நேரத்தில், தெற்கு கடலோரம் மற்றும் டெல்டா பகுதிகளில், அனேக இடங்களில் மழையும், ஒரு சில இடங்களில் கனமழை பெய்யக் கூடும். தெற்கு உள்மாவட்டங்களில், சில இடங்களில், மழை பெய்யலாம். மற்ற பகுதிகளில், வறண்ட வானிலை நிலவும்.புயல் எச்சரிக்கைஇந்நிகழ்வின் காரணமாக, கடல் கொந்தளிப்புடன் காணப்படுவதால், தென் கடலோர மீனவர்கள், கடலுக்குள் செல்ல வேண்டாம்.இவ்வாறு அவர் கூறினார்.காற்றழுத்த

தாழ்வு பகுதியின் காரணமாக, ராமேஸ்வரம், பாம்பன், துாத்துக்குடி உள்ளிட்ட பகுதிகளில், நேற்று காலை முதல், மழை பெய்து வருகிறது.துாத்துக்குடி, ராமேஸ்வரத்தில், மூன்றாம் எண், புயல் எச்சரிக்கை கூண்டு ஏற்றப்பட்டுள்ளது.

## கறிக்கோழி விலைரூ.10 சரிவு

நாமக்கல்:தொடர்ந்து, விரத நாட்கள் வருவதால், கறிக்கோழி விலை, 10 ரூபாய் வரை சரிந்துள்ளது.பல்லடம் கறிக்கோழி ஒருங்கிணைப்பு கமிட்டி நிர்ணயிக்கும் விலையை அடிப்படையாக கொண்டு, தமிழகத்தில், கறிக்கோழி சப்ளை செய்யப்படுகிறது. கடந்த ஆகஸ்ட், கடைசி வாரத்தில் இருந்து, ஜனவரி 1ம் தேதி வரை, கறிக்கோழி கிலோ, 80 ரூபாய்க்கு விற்றது. வரும் நாட்கள், சபரி மலை ஜோதி தரிசனம், வைகுண்ட ஏகாதசி, தைப் பொங்கல், தைப்பூசம் என, தொடர்ந்து விரத நாட்களாக இருப்பதால், கறிக்கோழி நுகர்வு, இப்போதிலிருந்தே குறையத் துவங்கியுள்ளது.நேற்று கிலோ, 70 ரூபாய்க்கு, கொள்முதல் விலை நிர்ணயிக்கப்பட்டது. 'தைப் பொங்கல் மற்றும் தைப் பூசம் முடிந்த பின் தான், கறிக்கோழி தேவை அதிகரிக்கும்' என, கறிக்கோழி உற்பத்தியாளர்கள் தெரிவித்தனர்.

## சாகுபடிக்கு அணை தண்ணீரை திறப்பதில் கம்பத்திற்கும், மேலுாருக்கும் பாகுபாடு ஏன் ஐகோர்ட்டில் நீதிபதிகள் கேள்வி

மதுரை:மதுரை மேலுார் பகுதியில் கருகும் ஒரு போக சாகுபடிக்கு வைகை அணையிலிருந்து தண்ணீர் திறக்க கோரிய வழக்கில், 'கம்பம் பள்ளத்தாக்கில் ஒரு போகத்திற்கு, 100 சதவீதம் தண்ணீர் வினியோகிக்கப்பட்டது. மேலுார் ஒரு போகத்திற்கு 27 சதவீதம் தான் வினியோகித்தனர். தற்போது, கம்பம் பகுதிக்கு இருபோக சாகுபடிக்கு தண்ணீர் வினியோகிக்கப்படுகிறது. இதில், பாகுபாடு காட்டுவது ஏன்?,' என, ஐகோர்ட் கிளையில் நீதிபதிகள் கேள்வி எழுப்பினர். மேலுார் திருமேனி, அமலன் தாக்கல் செய்த பொது நல மனுக்கள்: நாங்கள் முல்லைப் பெரியாறு அணையின், பழமையான ஆயக்கட்டு பாசன விவசாயிகள். ஒருபோக சாகுபடிக்கு 80 நாட்கள் தண்ணீர் தேவை; 49 நாட்கள் தண்ணீர் வழங்கினர். பயிர்கள் கருகுகின்றன. மேலுார் ஒருபோக சாகுபடிக்கு,

வைகையிலிருந்து 5 நாட்கள் தண்ணீர் திறக்க உத்தரவிட வேண்டும், என குறிப்பிட்டார்.

மேலூர் கிருஷ்ணமூர்த்தி, "மதுரை வடக்கு, மேலூர் தாலுகாவிற்கு தண்ணீர் திறக்க வேண்டும்," என மனு செய்தார்.

எதிர்மனுதாரர்களாக இணைத்துக்கொண்ட பி.டி.ராஜன் மற்றும் தந்தை பெரியார் கால்வாய் நீரினை பயன்படுத்துவோர் சங்கத் தலைவர் ஜெயராமன், "தண்ணீர் திறந்தால் கம்பம் பள்ளத்தாக்கில் இரு போக சாகுபடி, ஒரு போகமாக மாறிவிடும். இப்பிரச்னையில் கோர்ட் உத்தரவு பிறப்பிக்க, அதிகாரம் இல்லை," என மனு செய்தனர்.

திருமேனி தாக்கல் செய்த மற்றொரு மனு: தமிழக அரசின் தலைமைச் செயலாளர் தலைமையில் பொதுப்பணி, விவசாயத்துறை அதிகாரிகளின் அவசரக் கூட்டம் ஜன.,4 ல் நடத்த வேண்டும். முல்லைப் பெரியாறு, வைகை அணைகளின் நீர் இருப்பு அளவை பொறுத்து, அதை விவசாயம், குடிநீர் தேவைக்கு எவ்வாறு பயன்படுத்துவது என முடிவு செய்ய வேண்டும். ஜன.,6 ல் தலைமைச் செயலாளர், அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும்

என ஜன.,3 ல் ஐகோர்ட் உத்தரவிட்டது.

அமைச்சர்களின் பினாமிகள் பெயரில், தேனி மாவட்டத்தில் நிலம் உள்ளது. அவர்களின் வற்புறுத்தலால், தலைமைச் செயலாளர் ஜன.,4 ல் கூட்டம் நடத்தவில்லை. கோர்ட் உத்தரவை அவமதித்ததாக, தலைமைச் செயலாளர் ஷீலா பாலகிருஷ்ணன் மீது நடவடிக்கை எடுக்க உத்தரவிட வேண்டும், என குறிப்பிட்டார். நீதிபதிகள் ஆர்.சுதாகர், வி.எம்.வேலுமணி பெஞ்ச் முன், நேற்று மனுக்கள் விசாரணைக்கு வந்தன. திருமேனி சார்பில் வக்கீல் பீட்டர் ரமேஷ்குமார், கிருஷ்ணமூர்த்தி சார்பில் மகேந்திரன், ஜெயராமன் சார்பில் மூத்த வக்கீல் அஜ்மல்கான் ஆஜராயினர்.

பீட்டர் ரமேஷ்குமார்: கோர்ட் உத்தரவு பற்றி, தலைமைச் செயலாளருக்கு அரசுத் தரப்பில் தகவல் தெரிவிக்கவில்லை.

கூடுதல் அட்வகேட் ஜெனரல்

செல்லப்பாண்டியன்: ஜன.,3 மாலையில் தான் கோர்ட் உத்தரவிட்டது. மறுநாள்

கூட்டம் நடத்துவது இயலாத காரியம். அரசிற்கு, ஐகோர்ட் உத்தரவு நகல் கிடைக்கவில்லை. நீதிபதிகள்: ஐகோர்ட் பதிவுத்துறை மூலம் ஜன., 3 இரவு, உத்தரவு நகல் அரசுக்கு அனுப்பப்பட்டது. மனுதாரர்கள் தரப்பிலும் அனுப்பியுள்ளனர். பீட்டர் ரமேஷ்குமார்: பொதுப்பணித்துறை செயலாளர் தலைமையில் தான் கூட்டம் நடத்தியுள்ளனர்.

நீதிபதிகள்: அரசுத்தரப்பில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அறிக்கையில், நாங்கள் கோரிய விபரங்கள் இல்லை. ஒவ்வொரு ஆயக்கட்டிற்கும் ஒருபோகம், இருபோகத்திற்கு எவ்வளவு நீர் திறக்கப்பட்ட விபரங்களை சமர்ப்பிக்க வேண்டும்.

செல்லப்பாண்டியன்: முல்லைப் பெரியாறு அணையிலிருந்து, மேலூருக்கு தண்ணீர் திறக்க வாய்ப்பில்லை. குடிநீர் தேவைக்கு, அணையில் நீர் தேக்கி வைக்க வேண்டியுள்ளது. அமைச்சரின் பினாமி பெயரில் நிலம் உள்ளதாகவும், அதனால் மேலூருக்கு தண்ணீர் திறக்க தடை ஏற்படுத்துவதாக, மனுதாரர் வக்கீல் கூறுகிறார். குற்றச்சாட்டில் உண்மை இருக்கும் பட்சத்தில், விசாரணை நடத்த, அரசு தயார். நீதிபதிகள்: கம்பம் பள்ளத்தாக்கு ஒரு போகத்திற்கு, 100 சதவீதம் தண்ணீர் வினியோகிக்கப்பட்டுள்ளது. மேலூர் ஒருபோகத்திற்கு 27 சதவீதம்தான் வினியோகித்துள்ளனர். தற்போது, கம்பம் பகுதி இருபோக சாகுபடிக்கு தண்ணீர் வினியோகிக்கப்படுகிறது. இதில், பாகுபாடு காட்டுவது ஏன்?

செல்லப்பாண்டியன்: ஒவ்வொரு பகுதிக்கும், குறிப்பிட்ட அளவு நீர் வழங்க வேண்டும் என அரசு உத்தரவு எதுவும் இல்லை.

பீட்டர் ரமேஷ்குமார்: அரசு உத்தரவு உள்ளது.

நீதிபதிகள்: முல்லைப் பெரியாறு அணையிலிருந்து வந்த பங்கீட்டு நீர், வைகை அணையில் உள்ளது. அந்த நீரை மேலூருக்கு திறந்துவிடலாம். நீர் இருப்பு குறைந்ததும், ஈடு செய்யும் வகையில், முல்லைப் பெரியாறு அணையிலிருந்து வைகைக்கு நீர் திறந்துவிடலாம். செல்லப்பாண்டியன்: அப்படிச் செய்தால், கம்பம் பள்ளத்தாக்கிற்கு நீர் திறக்க முடியாது. நீதிபதிகள்: மேலூருக்கு தண்ணீர் திறந்தால், குடிநீர் பற்றாக்குறை ஏற்படும் எனில், கம்பம் பள்ளத்தாக்கிற்கு மட்டும் தொடர்ந்து தண்ணீர் திறப்பது ஏன்? இவ்வாறு விவாதம் நடந்தது.

தீர்ப்பை நாளைக்கு(இன்றைக்கு) நீதிபதிகள் ஒத்தி வைத்தனர்.

## கால்நடை தீவன பற்றாக்குறை சமாளிக்க சேலத்தில் ஐந்து தீவன கிடங்கு அமைப்பு

மேட்டூர்: நடப்பாண்டு வறட்சியால் கால்நடைகளுக்கு ஏற்படும் தீவன பற்றாக்குறை சமாளிக்க, கால்நடைத்துறை சார்பில், சேலம் மாவட்டத்தில், ஐந்து இடங்களில் தீவன கிடங்கு அமைக்கப்பட்டு, மானிய விலையில் தீவனம் வழங்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

பால் உற்பத்தியில், சேலம் மாவட்டம் மாநிலத்தில் முன்னணி இடத்தை வகிக்கிறது.கடந்த ஆண்டு பருவமழை தவறியதால், மாவட்டம் முழுவதும் கோடைகாலத்தில் நீடித்த வறட்சியால் தீவன பற்றாக்குறை ஏற்பட்டது. இதனால், பெரும்பாலான விவசாயிகள், தங்கள் கால்நடைகளை குறைந்த விலைக்கும், நஷ்டத்துக்கும் விற்பனை செய்தனர்.

மேலும், ஒரு மாதத்துக்கு முன், சேலம் மாவட்டத்தில், கோமாரி நோய்க்கு, 200க்கும் மேற்பட்ட கால்நடைகள் பலியாகி விட்டது. இதனால், சேலம் மாவட்டத்தில் பால் உற்பத்தி வெகுவாக குறைந்து விட்டது. இந்நிலையில், நடப்பாண்டும் சேலம் மாவட்டத்தில் தென்மேற்கு மற்றும் வடகிழக்கு பருவமழை மிக குறைவாக பெய்துள்ளது.

மாவட்டம் முழுவதும் வறட்சி நீடிப்பதால், கால்நடைகளுக்கான தீவனங்களுக்கு பற்றாக்குறை ஏற்பட்டது. வரும் கோடையில், தீவன பற்றாக்குறை மேலும் அதிகரிக்கும் அபாயம் இருப்பதால், அதை சமாளிக்க கால்நடைத்துறை, சேலம் மாவட்டத்தில், முதன்முறையாக, ஐந்து இடங்களில் தீவன கிடங்கு அமைக்க முடிவு செய்தது.

அதன்படி சேலம் மாவட்டத்தில், கால்நடைகள் அதிகம் காணப்படும் நங்கவள்ளி, மேச்சேரி, கொங்கணாபுரம், நரசோதிப்பட்டி, தலைவாசல் ஆகிய ஐந்து இடங்களில் கால்நடைத்துறை சார்பில் தீவனகிடங்கும் அமைக்கப்பட்டுள்ளது.

டெல்டா மாவட்டங்களில் தற்போது சம்பா நெல் சாகுபடி அறுவடை துவங்கியது. கால்நடைத்துறை சார்பில் டெல்டா மாவட்டங்களில் இருந்து வைக்கோல் கொள்முதல் செய்து, சேலம் மாவட்டத்தில் உள்ள, ஐந்து தீவன கிடங்குகளிலும் இருப்பு வைத்து, கால்நடை விவசாயிகளுக்கு விற்பனை செய்யப்படவுள்ளது.

இதுகுறித்து கால்நடைத்துறை அதிகாரி ஒருவர் கூறியதாவது:
டெல்டா மாவட்டங்களில் இருந்து வைக்கோல் கொள்முதல் செய்து, சேலம் மாவட்ட தீவன கிடங்குகளிலும் இருப்பு வைக்க ஒரு கிலோவுக்கு, 10 ரூபாய் வரை செலவாகும். எனினும், அரசு சார்பில் மானியத்தில், ஒரு கிலோ வைக்கோல், இரண்டு ரூபாய் வீதம், ஒரு மாட்டுக்கு, தினசரி, மூன்று கிலோ தீவனம் வழங்கப்படவுள்ளது.
ஒரு மாட்டுக்கு, ஒரு வாரத்துக்கு தேவையான, 21 கிலோ தீவனம் மொத்தமாக வழங்கப்படும். சேலம் மாவட்டத்தில் வறட்சியால் ஏற்பட்டுள்ள தீவன பற்றாக்குறை சமாளிக்க, வரும் மார்ச் மாதம் வரை, தீவன கிடங்கும் மூலம் விவசாயிகளுக்கு தீவனம் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.
தேவையை பொருத்து மேலும் இரு மாதம் காலநீடிப்பு செய்யவும் வாய்ப்புள்ளது. ஒரு விவசாயி தங்களிடம் எத்தனை மாடு உள்ளது என்பதற்காக கால்நடைத்துறை மருத்துவர் சான்றிதழ் பெற வேண்டும். அந்த சான்றிதழுடன், தீவன கிடங்குக்கு வரும் விவசாயிகளுக்கு, தேவையான தீவனம் மானிய விலையில் வழங்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.
இவ்வாறு அவர் கூறினார்.

சம்பா பருவ அறுவடை பணிகள் துவக்கம் . .! இயந்திரங்கள் படையெடுப்பு

புதுச்சேரியின் நெற்களஞ்சியமான பாகூர் உள்ளிட்ட அனைத்து இடங்களிலும், அறுவடை பணிகள் முழு வீச்சில் துவங்கி நடந்து வருகிறது.
புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில், 44 ஆயிரத்து 798 ஏக்கர் பரப்பளவில் விவசாயம் நடக்கிறது. இதில், புதுச்சேரி பகுதியில் மட்டும், 26 ஆயிரத்து 542 ஏக்கரில் விவசாயம் செய்யப்படுகிறது.புதுச்சேரி பகுதியில், கடந்த 2011-12ம் ஆண்டில், 25 ஆயிரத்து 632 மெட்ரிக் டன் தான்யங்கள் உற்பத்தி செய்யப்பட்டன. இதற்கு இணையாக, 25 ஆயிரத்து 217 மெட்ரிக் டன் அரிசி உற்பத்தி செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.
புதுச்சேரி விவசாயிகள், நெல் சாகுபடியில் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர். இதன் எதிரொலியாக, அனைத்து பகுதியிலும், ஆண்டு முழுவதும், மூன்று போகமாக நெல் பயிரிடப்படுகிறது.பிப்ரவரியில் ஆரம்பித்து, ஏப்ரல் மாதம்

வரையிலான தாளடி பருவத்திலும், மே மாதம் ஆரம்பித்து, ஜூலை வரையிலான, சொர்ணாவாரி பருவத்திலும், மூன்று மாதத்தில் அறுவடைக்கு தயாராகும் நெல் ரகங்கள் சாகுபடி செய்யப்படுகிறது.இந்த இரண்டு பருவங்களிலும், ஏ.டி.டி.-43, ஏ.டி.டி.-37, சின்னப் பொன்னி, ஐ.ஆர்.- 50 போன்ற ரகங்கள் பயிரிடப்படுகிறது. மூன்றாவது போகமான சம்பா பருவம், ஆகஸ்ட் மாதத்தில் துவங்கி, ஜனவரி வரை நீடிக்கும். இந்த 6 மாத கால பருவத்தில், அதிகளவில் நெல் சாகுபடியை விவசாயிகள் மேற்கொள்கின்றனர். மழை மற்றும் பனிக்காலம் என்பதால் நெல் சாகுபடிக்கு உகந்ததாக விவசாயிகள் கருதுகின்றனர்.

மேலும், சம்பா பருவ சாகுபடியை, அறுவடை திருவிழாவாக கொண்டாடப்படும் பொங்கல் பண்டிகை சீசனில் அறுவடை செய்ய முடியும் என்பதால், சம்பா பருவம் விவசாயிகள் மத்தியில் முக்கியத்துவம் பெற்றுள்ளது.

சம்பா பருவத்தில், பொன்னி, பொன்மணி, சாவித்திரி, பி.பி.டி., போன்ற நெல் ரகங்கள் பயிரிடப்படுகிறது. இந்த பருவத்தில் பரவலாக பயிரிடப்பட்டுள்ள நெல் வளர்ந்து, கதிர்விட்டு, அறுவடைக்கு தயாராகி விட்டது.

புதுச்சேரியின் நெற்களஞ்சியமாக திகழும், பாகூரில் 5,000 ஏக்கருக்கும் அதிகமான பரப்பளவில் சம்பா பருவத்தில் நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

பொங்கல் பண்டிகை நெருங்கி விட்ட நிலையில், "தை பிறந்தால் வழி பிறக்கும் ' என்ற நம்பிக்கையோடு, அறுவடை பணிகளை விவசாயிகள் துவக்கி விட்டனர். இதனால், கிராமங்கள் "களை' கட்டி உள்ளன.கடந்த காலங்களில், வயல்களில் ஆட்கள் இறங்கி, நெல்லை அறுவடை செய்வது வழக்கம். தற்போது, பல்வேறு காரணங்களால், விவசாய வேலைகளுக்கு ஆட்கள் கிடைப்பது குதிரைக் கொம்பாகி விட்டது.

இதனால், இயந்திரங்களின் உதவியை விவசாயிகள் நாடுகின்றனர்.

விவசாயிகளின் தேவையை பூர்த்தி செய்யும் வகையில், திருவண்ணாமலை, சேலம், கள்ளக்குறிச்சி உள்ளிட்ட ஊர்களில் இருந்து நெல் அறுவடை இயந்திரங்கள், புதுச்சேரிக்கு படையெடுத்துள்ளன.

பாகூர், சேலியமேடு, அரங்கனூர், பின்னாட்சிக்குப்பம் மற்றும் சுற்றிலும் அமைந்துள்ள குட்டியாங்குப்பம் உள்ளிட்ட தமிழக கிராமங்களில் நெல் அறுவடையில், இயந்திரங்கள் தீவிரமாக ஈடுபடுத்தப்பட்டுள்ளன.
செயின் மூலம் இயங்கும் இயந்திரங்களை கொண்டு அறுவடை செய்வதற்கு, ஒரு மணி நேரத்துக்கு 2000 ரூபாய் கட்டணமாக வசூலிக்கப்படுகிறது. இந்தவகை இயந்திரங்கள், ஒன்னரை மணி நேரத்தில், ஒரு ஏக்கர் நிலத்தில் விளைந்துள்ள நெல்லை அறுவடை செய்துவிடும். இவை, ஈரமாக உள்ள வயல்களில் அதிகமாக பயன்படுத்தப்படுகிறது. டயர் பொருத்தப்பட்ட இன்னொரு வகை இயந்திரங்கள் மூலம் அறுவடை செய்வதற்கு, ஒரு மணி நேரத்துக்கு, 1200 ரூபாய் கட்டணமாக வசூலிக்கப்படுகிறது. இந்த வகை இயந்திரங்கள், ஒரு மணி நேரத்தில், ஒரு ஏக்கர் நிலத்தில் அறுவடையை முடித்துவிடும் என்பது குறிப்பிடத்தக்கது.-நமது சிறப்பு நிருபர்-

விவசாய கடன் தொகை வழங்கமண்டல இணைப்பதிவாளருக்கு மனு

கள்ளக்குறிச்சி :சின்னசேலம் பகுதி விவசாயி ஒருவர் தனக்கு ஒதுக்கீடு செய்த விவசாய கடன் தொகையைவழங்க கோரி மண்டல இணைப் பதிவாளருக்கு மனு அனுப்பியுள்ளார்.சின்னசேலம் அடுத்த தெங்கியாநத்தத்தைச் சேர்ந்தவர் ஏகாம்பரம். விவசாயி. இவர் விழுப்புரம் மண்டல இணை பதிவாளருக்கு அனுப்பிய மனு:
நான் கடந்த 20 ஆண்டுகளாக தெங்கியாநத்தம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியில் வரவு செலவு வைத்து விவசாய கடன் பெற்று சரியான முறையில் திருப்பி செலுத்தி வருகிறேன். கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்பு ஒன்றரை ஏக்கர் கரும்பு நடவு செய்து, அதற்கு செலவு செய்ய முடியாமல் விவசாய கடன்கோரி விண்ணப்பம் செய்தேன்.கடன் தொகை ஒதுக்கீடு செய்த பிறகு பணத்தை கேட்டபோது, எனது மனைவி ராணி இந்திரா சுய உதவிக் குழு மூலம் மற்றவர்களுக்கு கடன் வாங்கி கொடுத்துள்ளார். அதனை திருப்பி செலுத்த வில்லை. இதனால் லோன் பணம் தரமுடியாது என்று கூறினர். எனக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட விவசாய கடன் தொகையை உடன்வழங்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.இவ்வாறு அந்த மனுவில் உள்ளது.

## ஆப்பிள் விலை அதிகரிப்பு திராட்சை குறைவு

திண்டுக்கல்:வரத்து குறைவால் ஆப்பிள் விலை அதிகரித்துள்ளது. திராட்சை விலை கணிசமாக குறைந்துள்ளது.

அனைத்து சீசன்களிலும் ஆப்பிள் தட்டுப்பாடு இல்லாமல் கிடைத்துக்கொண்டிருக்கும். தற்போது வரத்து குறைந்திருப்பதால் ஆப்பிள் விலை கிலோவிற்கு ரூ. 10 அதிகரித்துள்ளது. சிம்லா ஆப்பிள் கிலோ ரூ. 115 க்கும், காஷ்மீர் ஆப்பிள் ரூ. 100 க்கும் விற்கப்படுகிறது.

திராட்சை விளைச்சல் இந்த ஆண்டு அதிகரித்துள்ளது. கிலோ ரூ. 100 வரை விற்பனை செய்யப்பட்டு வந்த விதையில்லா பச்சை திராட்சை தற்போது ரூ. 90 க்கும், கருப்பு திராட்சை ரூ. 65 க்கும் விற்கப்படுகிறது.

சாதாரண கருப்பு திராட்சை கிலோ ரூ. 30 க்கு விற்கப்படுகிறது. சாதாரண பச்சை திராட்சை வரத்து இல்லை என வியாபாரிகள் தெரிவித்தனர்.

## "திடீர்' மழையால்சம்பா பயிர் பாதிப்பு

திருத்துறைப்பூண்டி: திருத்துறைப்பூண்டி தாலுக்காவில் திடீர் மழையால் 50 ஆயிரம் ஏக்கரில் சம்பா சாகுபடி கதிர்கள் உதிர்ந்து, விளைச்சல் பாதிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி தாலுக்கா, முத்துப்பேட்டை பகுதியில் கடைமடை என்பதால் காவிரி நீர் தாமதமாகவும், குறைவாகவும் வந்தடைந்தது. சம்பா பருவத்தில் நேரடி நெல் விதைப்பு செய்த பகுதிகளில் ஓரளவு அறுவடை முடிந்து விட்டது. தாமதமாக, நேரடி விதைப்பு, நடவு செய்த பகுதிகளில் தற்போது அறுவடைக்கு பயிர்கள் தயாராக உள்ளன. கதிர்கள் முற்றி காணப்படுகின்றன.

நேற்றுக்காலை 6 மணி முதல் திடீரென தொடர் மழை பெய்தது. இதனால், முற்றிய கதிர்கள் பயிரில் இருந்து உதிர்ந்து வீணாகும் அபாயம் ஏற்பட்டுள்ளது. மேலும், படுத்த நிலையிலுள்ள கதிர்கள் முளைத்து, பயனற்று போகும் நிலையும் நிலவுகிறது. இதனால், இப்பகுதி விவசாயிகள் ஆழ்ந்த கவலையில் ஆழ்ந்துள்ளனர். சம்பா விளைச்சலில், நஷ்டம் ஏற்பட்டால், நடப்பாண்டு வங்கிகள் மூலம் பெற்ற கடனை திரும்ப செலுத்த முடியுமா? என, விவசாயிகள் பரிதவிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**நாமகிரிப்பேட்டை கூட்டுறவு சங்கத்தில் ரூ.85 லட்சத்திற்கு மஞ்சள் ஏலம்**



நாமகிரிப்பேட்டை: நாமக்கல் மாவட்டம் நாமகிரிப்பேட்டையில் ரூ. 85 லட்சத்திற்கு மஞ்சள் ஏலம் விடப்பட்டது. வாரந்தோறும் செவ்வாய்கிழமையன்று நாமகிரிப்பேட்டையில் மஞ்சள் ஏலம் நடைபெறுகிறது. நேற்று நடந்த ஏலத்தில் விரலி ரகம் ஒரு குவிண்டால் ரூ.7,800க்கும், குறைந்தபட்சம் ரூ.1605க்கும் ஏலம் போனது. அதே போல் குண்டு ரகம் அதிகபட்சமாக மூட்டை ரூ.6,680க்கும், குறைந்தபட்சம் ரூ.5369க்கும் ஏலம் போனது. பனங்காலி ரகம் அதிகபட்சமாக ரூ.13 ஆயிரத்துக்கு விலை போனது. விரலி 1605 மூட்டைகளும் உருண்டை 599 மூட்டைகளும், பனங்காலி 60 மூட்டைகள் என மொத்தம் 2264 மூட்டைகளும் ரூ.85 லட்சத்திற்கு விற்பனையானது.

**விவசாயிகள் கண்டன பேரணி எதிர்க்கட்சிகள் வெளிநடப்பு**

திருவனந்தபுரம்: தமிழகம், கர்நாடகா, கேரளா மாநிலங்களில் அடங்கிய மேற்கு தொடர்ச்சி மலை பகுதியை பாதுகாப்பு பகுதியாக அறிவிக்கும்படி கஸ்தூரி ரங்கன் கமிட்டி அறிக்கையில் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. இந்த அறிக்கையில் தெரிவித்துள்ள பரிந்துரைகளை அமல்படுத்தினால், மலையோர விவசாயிகள்

மற்றும் அப்பகுதியில் காலம், காலமாக வசித்து வருபவர்கள் வெளியேற்றப்படுவர் என்பதால்,  இதை கடுமையாக எதிர்த்து வருகின்றனர். சமீபத்தில் பிரதமர் மன்மோகன் சிங் கொச்சி வந்தபோது, இது தொடர்பாக கேரள அரசின் சார்பில் பிரதமரிடம் ஒரு கோரிக்கை மனு அளிக்கப்பட்டது.
அதில், கஸ்தூரி ரங்கன் கமிட்டியின் அறிக்கையை அமல்படுத்தும் முன்பு, கேரள அரசின் கருத்தை கேட்க வேண்டும்' என தெரிவிக்கப்பட்டிருந்தது. அதற்கு பிரதமரும் சம்மதம் தெரிவித்துள்ளார். இதற்கிடையே, கடந்த இரு மாதங்களுக்கு முன், கஸ்தூரி ரங்கன் அறிக்கையை அமல்படுத்தக் கூடாது என கோரி, இடுக்கி மாவட்டத்தில் போராட்டம் நடந்தது. இந்த போராட்டத்தில் பல பகுதிகளில் வன்முறை வெடித்தது. ஏராளமான அரசு வாகனங்கள் நொறுக்கப்பட்டன.
இந்த கமிட்டியின் அறிக்கையை அமல்படுத்தக் கூடாது என வலியுறுத்தி, நேற்று திருவனந்தபுரத்தில் ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்ட கண்டன பேரணி நடந்தது. இந்த விவகாரம் கேரள சட்டசபையிலும் நேற்று எதிரொலித்தது. கஸ்தூரி ரங்கன் அறிக்கை தொடர்பாக, மார்க்சிஸ்ட் கட்சி உறுப்பினர் ஜெயச்சந்திரன் ஒத்திவைப்பு தீர்மானம் கொண்டு வந்தார்.

இந்த ஒத்திவைப்பு தீர்மானத்திற்கு சபாநாயகர் கார்த்திகேயன் அனுமதி மறுத்தார். இதை கண்டித்து, மார்க்சிஸ்ட் கட்சி தலைமையில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர்.

**சீன கலப்பட உரம் விற்கப்படவில்லை**




திருவாரூர்: தஞ்சை கூட்டுறவு விற்பனை இணையத்தின் 62வது பேரவை கூட்டம் நேற்று திருவாரூரில் நடந்தது. இதில், கும்பகோணம் மத்திய கூட்டுறவு வங்கியின்

தலைவர் ஆசைமணி பேசுகையில், ‘‘விவசாயிகள் விரும்பி வாங்கும் வகையில் அவர்கள் கேட்கும் கம்பெனிகளின் உரம், பூச்சி மருந்துகள், களைக்கொல்லி போன்றவற்றினை வாங்கி விவசாயிகளுக்கு விற்பனை செய்யும் வகையில் தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை இணையம் செயல்பட வேண்டும். இறக்குமதி செய்யப்பட்ட கலப்பட சீன உரம் டெல்டா மாவட்டங்களில் ஒரு துளி கூட சப்ளை செய்யப்படவில்லை‘‘ என்று தெரிவித்தார்.

**காற்றழுத்தம் வலு குறைந்தது : வறண்ட வானிலை நிலவும்**



சென்னை: இலங்கை அருகே நிலை கொண்டு இருந்த காற்றழுத்தம் வலு குறைந்தது. கடந்த இரண்டு  நாட்களாக இலங்கை மற்றும் மன்னார் வளைகுடா அருகே நிலை கொண்டு இருந்த காற்றழுத்தம் நேற்று மேலும் வலுவிழந்தது. இதனால், தமிழகம் புதுச்சேரியில் மழை பெய்யும் வாய்ப்பு குறைந்தது. ஆனால் தென் மாவட்டங்களில் ராமநாதபுரம், திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி, தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களில் மட்டும் இன்று லேசானது முதல் மிதமான மழை பெய்யும் வாய்ப்புள்ளது.

கடல் மேற்பரப்பில் பலத்த காற்று வீசும். ஒரு சில நேரங்களில் கடுமையான சூறாவளி காற்று வீசவும் வாய்ப்புள்ளது. இதுதவிர தமிழகத்தின் பிற மாவட்டங்களில் பொதுவாக வறண்ட வானிலை  காணப்படும். பாளையங்கோட்டையில் நேற்று அதிகபட்சமாக 95 டிகிரி வெயில் நிலவியது. கோவை, மதுரை, திருப்பத்தூரில் 92 டிகிரி வெயில் நிலவியது. சென்னையில் 85 டிகிரி வெயில் நிலவியது.

**அமெரிக்காவில் வரலாறு காணாத பனி : மைனஸ் 51 டிகிரி குளிர் பதிவானது**



சிகாகோ: துருவ பனிப்புயல் காரணமாக, அமெரிக்கா மற்றும் கனடாவில் வரலாறு காணாத பனிப்பொழிவு காணப்படுகிறது. மைனஸ் 51 டிகிரி செல்சியஸ் அளவுக்கு கடும் குளிர் வீசுவதால், பள்ளி, கல்லூரி, நிறுவனங்கள் மூடப்பட்டுள்ளன. மக்கள் வீட்டை விட்டு வெளியே வர வேண்டாம் என எச்சரிக்கப்பட்டுள்ளது. பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை முற்றிலும் முடங்கியுள்ளது. அமெரிக்கா மற்றும் கனடாவில் கடந்த சில நாட்களாக துருவ பனிப்புயல் வீசி வருகிறது. இப்புயல் தீவிரமடைந்து, கடந்த 2 நாட்களாக கடும் குளிர் வாட்டி எடுக்கிறது.

குறிப்பாக அமெரிக்காவின் மத்திய மேற்கு பகுதியில் அமைந்துள்ள சிகாகோ, மோன்டனா, மின்னசோடா, இல்லினாயிஸ் ஆகிய நகரங்களில் வரலாறு காணாத பனிப்பொழிவு காணப்படுகிறது. அதிகபட்சமாக, மான்டனாவின் கோமர்டவுன் பகுதியில் நேற்று மைனஸ் 51 டிகிரி செல்சியஸ் அளவுக்கு கடும் குளிர் பதிவானது. சிகாகோவில் மைனஸ் 16 டிகிரி பதிவானது. கடந்த 20 ஆண்டுகளில் அமெரிக்காவில் இந்தளவுக்கு பனிப்பொழிவு இருந்ததில்லை என அந்நாட்டின் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

துருவ பனிப்புயல் காரணமாக, அமெரிக்காவின் பெரும்பாலான பகுதிகளில் போக்குவரத்து முடங்கியுள்ளது. சாலைகளில் பனிக்கட்டிகள் குவிந்து காணப்படுகின்றன. நேற்று முன்தினம் 4,300க்கும் மேற்பட்ட விமானங்கள் ரத்து செய்யப்பட்டன. 6,500க்கும் மேற்பட்ட விமானங்கள் தாமதமாக புறப்பட்டு சென்றன. சிகாகோவில் நேற்றும் விமான சேவை முடங்கியது. இதனால், புத்தாண்டு கொண்டாட்டத்துக்கு வந்த மக்கள் தங்கள் சொந்த ஊருக்கு திரும்ப

முடியாமல் விமான நிலையங்களில் தவிக்கின்றனர்.

சிகாகோ, இல்லினாயிஸ், மின்னசோடா, விஸ்கான்சின், இண்டியா னோபோலிஸ் ஆகிய நகரங் களில் பள்ளி, கல்லூரிகள், நிறுவனங்களுக்கு விடுமுறை அறிவிக்கப்பட் டுள்ளன. மக்கள் வீடுகளை விட்டு வர வேண்டாம் என எச்சரிக்கப்பட்டுள்ளனர். 5 நிமிடம் பனியில் நின்றாலே ஆடை மூடாத உடல் பகுதிகள் உறைந்து விடுகின்றன. இதனால், குறிப்பாக குழந்தைகளை எங்கும் அனுப்ப வேண்டாம் என எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளது.

விஸ்கான்சின் உள்ளிட்ட சில பகுதிகளில், மைனஸ் 12 டிகிரி மட்டுமே குளிர் உள்ள போதிலும், பனிப்புயல் வீசுவதால் மைனஸ் 37 டிகிரி செல்சியஸ் அளவுக்கு குளிர் உணரப்படுவதாக கூறப்படுகிறது. இதனால், இல்லினாயிஸ் உள்ளிட்ட நகரங்களில் நெருக்கடி நிலை பிரகனடப்படுத்தப்பட்டுள்ளது. மீட்புப்பணிகள் மேற்கொள்ள தேசிய பாதுகாப்பு படையினரின் உதவியும் நாடப்பட்டுள்ளது. வீடில்லாத மக்களை பாதுகாப்பான இடங்களுக்கு கொண்டு செல்ல போலீசாருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. மேலும், பல நகரங்களில் பனியில் உறைந்து மின்இணைப்புகள் துண்டிக்கப்பட்டுள்ளன.

மின்சாரம் இல்லாததால் வீடுகளில் வசிக்க முடியாமல் மக்கள் அரசின் தற்காலிக தங்கும் விடுதிகளில் தஞ்சம் புகுந்துள்ளனர். இதே போல, கனடாவிலும் 30,000க்கும் மேற்பட்ட மக்கள் மின்சாரம் இல்லாமல் கடும் குளிரில் தவிக்கின்றனர். அங்கு மைனஸ் 20 டிகிரி செல்சியஸ் குளிர் பதிவாகியுள்ளது. இதனால், விமான சேவை முற்றிலும் நிறுத்தப்பட்டுள்ளது.

சிகாகோவை ஒட்டியுள்ள வட தகோடா, தென் தகோடா பகுதிகளில் மைனஸ் 29 டிகிரி செல்சியஸ் குளிர் பதிவாகியுள்ளது. இன்னும் 3, 4 நாட்களுக்குள் வானிலை சீராகும், பனிப்புயல் குறையும் என எதிர்பார்க்கப்படுவதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

**1ம் தேதி முதல் புதிய நடைமுறையால் சில்லறை விற்பனையில் முட்டை விலை குறைகிறது**



நாமக்கல்: நாமக்கல் மண்டலத்தில் கடந்த 1ம் தேதி முதல் அமலுக்கு வந்த புதிய திட்டத்தின் படி முட்டை விற்பனை செய்யப்படுவதால் சில்லறை விற்பனையில் விலை குறைந்துள்ளது. தமிழகம் மற்றும் கேரளாவில் உள்ள முக்கிய நகரங்களுக்கு முட்டையை எடுத்து செல்லும் போக்குவரத்து செலவு ஊருக்கு தகுந்தாற்போல ஒரு முட்டைக்கு 10 காசு வீதம் 25 காசு வரை தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழு(என்இசிசி) நிர்ணயம் செய்துள்ளது. நாமக்கல் பண்ணையில் உற்பத்தியாகும் முட்டைகளை ஒருங்கிணைப்பு குழு  நிர்ணயம் செய்யும் விலைக்கு வாங்கும் வியாபாரிகள் அதை வெளியூரில் முட்டை விற்பனையாளர்களிடம் நிர்ணயித்த விலைக்கே விற்கின்றனர். இதனால் கடைகளில் முட்டை விலை தமிழகம் முழுவதும் கடந்த மாதத்தை விட குறைந்துள்ளது. நாமக்கல்லில் கடந்த மாதம் ஒரு முட்டை ரூ.4.50 வரை விற்பனையானது. இப்போது நாமக்கல் பகுதியில் ஒருமுட்டை ரூ 4க்கு விற்பனையாகிறது. கன்னியாகுமரியில் ^5க்கு விற்பனையான முட்டை ரூ.4.25 க்கு கிடைக்கிறது. இது குறித்து தமிழ்நாடு கோழிப்பண்ணையாளர்கள் சங்க தலைவர் நல்லதம்பி கூறுகையில், ‘ஒருங்கிணைப்பு குழு நிர்ணயம் செய்யும் விலைக்கு பண்ணையாளர்கள் முட்டை விற்பனை செய்வதால் நல்ல விலை கிடைக்கிறது. பண்ணையாளர்கள் ஒற்றுமையாக ஒரே விலைக்கு விற்பனை செய்வதால் வியாபாரிகளும் பேரம் பேசுவதில்லை. இதே நிலை நீடித்தால் தான் வருங்காலங்களில் தொழில் செய்ய முடியும். கோழி தீவன விலையேற்றத்தால் முட்டையின் உற்பத்தி செலவு பண்ணைக்கு பண்ணை மாறுபடுகிறது. எனவே வருங்காலங்களில் முட்டை விற்பனை லாபகரமான தொழிலாகவும் மக்களுக்கு குறைந்த விலையில் முட்டை கிடைக்கவும் இதை பின்பற்றுவது அவசியம்,’’ என்றார்.

## 23 ஊராட்சி விவசாயிகள் சார்பில் தும்பலஅள்ளி அணையை பாதுகாக்க கோரி ஆர்ப்பாட்டம்

தர்மபுரி, : தர்மபுரி அருகே தும்பலஅள்ளி அணையை பாதுகாக்க கோரி 23 ஊராட்சிகளைச் சேர்ந்த விவசாயிகள் பங்கேற்கும் ஆர்ப்பாட்டம் கலெக்டர் அலுவலகம் முன் நாளை நடக்கிறது.

தர்மபுரி மாவட்டம் பாலக்கோடு அருகே தும்பலஅள்ளி அணை பல ஆண்டுகளாக வறண்டு கிடக்கிறது. இதனால், இந்த அணையை நம்பியுள்ள 23 ஊராட்சிகளில் 65 ஏரிகள், 16 தடுப்பணை, 25 குட்டைகள் நீரின்றி காய்ந்துள்ளன. 2,617 ஏக்கருக்கு மேல் விளை நிலங்கள் பாசன வசதி இல்லாமல் தரிசு நிலமாக மாறி வருகிறது. தும்பலஅள்ளி அணை கால்நடைகளுக்கு மேய்ச்சல் நிலமாக மாறியுள்ளது. கிருஷ்ணகிரி மாவட்டம் எண்ணேகொல்புதூர் அணையின் வலதுபுறம் கால்வாயிலிருந்து புதிய கால்வாய் அமைத்து தும்பலஅள்ளி அணைக்கு உபரிநீர் கொண்டு வர வேண்டும் என விவசாயிகள் நீண்டகாலமாக போராடி வருகின்றனர். இந்நிலையில் தும்பலஅள்ளி நீர்தேக்கம் திட்டம் பாதுகாப்பு விவசாயிகள் கூட்டமைப்பு மற்றும் மனித உரிமைக்கான குடிமக்கள் இயக்கம் சார்பில் தமிழக அரசின் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் நாளை (7ம் தேதி) காலை கலெக்டர் அலுவலகம் முன் நடக்கிறது. இதில் தமிழக விவசாயிகள் சங்க மாநில தலைவர் சின்னசாமி கலந்து கொண்டு பேசுகிறார். ஆர்ப்பாட்டத்தில் 23 ஊராட்சியைச் சேர்ந்த ஆயிரத்திற்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொள்கின்றனர்.

## அரியலூர் மாவட்டத்தில் பரவலாக மழை உழவுப் பணிகளில் விவசாயிகள் மும்முரம் அரசும் கை கொடுக்க கோரிக்கை

அரியலூர்:அரியலூர் மாவட்டத்தில் தற்போது ஆங்காங்கே மழை பெய்து வருவதால் விவசாயிகள், விவசாய பணிகளில் தீவிரம் காட்டி வருகின்றனர். எனினும் விவசாயிகள் பணிகளை செம்மையாக செய்யும் வகையில் அரசும் தேவையான உதவிகளை செய்து தர வேண்டும் என்ற கோரிக்கையும் எழுந்துள்ளது.

அரியலூர் மாவட்டத்தில் கடந்தாண்டு பருவமழை பொய்த்ததால், ஏரிகள் நீர்

வரத்தின்றி வறண்டது. இதனால் விவசாயம் பொய்த்துப் போனது. ஆனால் இந்தாண்டு ஒரளவு மழை பெய்ததா லும், ஏரிகளுக்கு ஓரளவு தண்ணீர் வந்துள்ளதாலும் மாவட்டம் முழு வதும் விவசாய பணிகள்
தீவிரமாக நடந்து வருகிறது. ஆனால் ஆங்காங்கே நடந்து வரும் தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதியளிப்பு திட்டத்தின் காரணமாக விவசாய பணிகளுக்கு ஆள் கிடைக்காத நிலை பல இடங்களில் ஏற்பட்டுள்ளது. இதனால் விவசாயிகளுக்கு, விவசாய பணிகளுக்காக வெளியூர்களில் இருந்து ஆட்கள் கொண்டு வர வேண்டியுள்ளதால், செலவுகளும் அதிகரித்துள்ளது.
இதனால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.
தற்போது மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் மழையை மட்டுமே நம்பி பருத்தி, மக்காசோளம் போன்ற மானாவாரி பயிர்களை பயிரிட்டு வருகின்றனர். கடந்த காலங் களை விட இந்தாண்டு உழவு கூலி, ஆள் கூலி, விதை, பயிர் ஆகியவற்றின் விலை உயர்வு விவசாயிகளை மேலும் கவலை கொள்ள வைத்துள்ளது.
மாவட்டத்தில் செந்துறை சுற்று வட்டார பகுதிகளான ராயம்புரம்,
பொய்யாதநல்லூர், பொட்ட வெளி, குழூமூர் பகுதிகளில் உழவு ஓட்ட டிராக்டருக்கு ஒரு மணி நேரத்திற்கு கடந்தாண்டு ரூ.700 ஆனது. தற்போது இது ஆயிரம் ரூபாயாக அதிகரித்துள்ளது. ஏர் மாட்டுக்கு கடந்தாண்டு ரூ.1000மும், இந்தாண்டு ரூ.1300ம்
ஆகிறது. விதைப்பு கூலி கடந்தாண்டு ரூ.200ஆக இருந்தது. இந்தாண்டு ரூ.250 ஆகவும், விதை விலையும் அதிகரித்துள்ளது.
உரம், பூச்சி கொல்லி மருந்து, களையெடுப்பு என உற்பத்தி செலவு அதிகரித்துள்ள நிலையில், விவசாயிகளுக்கு செலவு செய்யும் அளவுக்கு லாபம் கிடைக்குமா என்ற கவலையும் மேலோங்கி உள்ளது.
இருப்பினும் பாரம்பரிய தொழிலான விவசாயத்தை விவசாயிகள் கைவிட முடியாத நிலையில், அவர்களுக்கு தேவையான உதவிகளை செய்து தர வேண்டும் என அரசுக்கு விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**சம்பா நெற்பயிரில் குலைநோய் தாக்குதலை கட்டுப்படுத்தலாம்வேளாண் அதிகாரி தகவல்**

கறம்பக்குடி, : கறம்ப க்குடி பகுதிகளில் சம்பா நெற்பயிரில் ஏற்பட்டுள்ள குலைநோய் தாக்குதலை கட்டுப்படுத்தி மகசூலை அதிகரிக்கச் செய்ய விவசாயிகள் தகுந்த நடவடிக்கைக ளை மேற்கொள்ள வே ண் டும் என கறம்பக்குடி வேளாண் உதவி இயக்குனர் மனோகரன் ஆலோசனை களை தெரிவித்துள்ளார்.

கறம்பக்குடி வட்டாரத்தில் சாகுபடி செய்யப்பட்டுள்ள சம்பா நெற்பயிரில் குலை நோய்தாக்குதல் சில கிராமங்களில் உள்ள விவசாய பகுதிகளில் தென்படுகிறது. அதிகப் பணியும் குறைந்த வெப்ப நிலையும், காற்றில் ஈரப்பதமும் இருப்பதால் இந்த குலைநோய் தாக்குவதற்கு காரணமாக அமைகிறது. மேலும் தழைச்சத்து அதிகம் இடுவதாலும் இந்த நோய் தாக்குகின்றன.

நெற்பயிரில் குலைநோயானது இலைப்பகுதி, கனு கதிரின் கழுத்து என 3 பகுதிகளை குறிவைத்து தாக்குகிறது. இதில் ஆரம்ப நிலையில் இலைகளில் நீண்ட கண் வடிவ புள்ளி கள் தோன்றுகின்றன. இந்த ப்புள்ளிகளில் நடுப்பகுதியில் சாம்பல் நிறத்திலும், இதனைச் சுற்றி பழுப்பு நிறத்திலும் காணப்படுகின்றன. பின்பு இந்தப் புள் ளிகள் ஒன்றோடொன்று பெரிய புள்ளிகளாகி மா றும். புள்ளியில் உள்ள இலையின் பகுதிகள் பாதிப்படைந்து இவைகள் நார் நாராக கிழிந்து சேதமடைகின்றன. இதைப் பார்ப்பதற்கு பயிர் காய்ந்து சருகு போன்று காணப்படுகின்றன. பழுதடைந்த கனுப்பகுதிகள் கருமை நிறமாகி கிளிந்து தொங்கி நெல் மணிகள் பால் பிடிக்காமல் பதராகி போகின்றன. இந்த மாதிரி இலைகளில் ஏற்படும் குலைநோய் தாக்குதலை கட்டுப்படுத்த விதைகளை விதைக்கும் முன்னரே 1 கிலோ விதைக்கு 4 கிராம் ட்ரைக்கோ டெர்மாவிரிடி என்ற பூஞ்சான் கொல்லியை கலந்து விதை க்க வேண்டும். மேலும் வர ப்புகளில் புற்களை வளர விடாமலும், தழைச்சத்து உரத்தை அதிகமாக இடா மலும் பாதுகாக்க வேண்டும்.

மேலும் ட்ரை சைக்« ளாசோல் என்ற பூஞ்சான் கொ ல்லி மருந்தினை ஏக்கருக்கு 120 கிராம் என்ற அளவில் 15 நாட்கள் இடைவெளியில் 2 முறை தெளித்து குலைநோயை கட்டுப்படுத்தலாம்.
குலை நோயை கட்டுப்படுத்துவதற்குரிய இந்த மருந்து அந்தந்த வேளாண் மையத்தில் 50 சதவீத மான்ய விலையில் வழங்கப்பட்டு வருகிறது.
மேற்கண்ட ஆலோசனைகளை கடைப்பிடித்து சம்பா நெற்பயிர்களை குலைநோய் தாக்குதலில் இருந்து பாதுகாத்து அதிக மகசூலை பெறலாம். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

**அரசு நெல் கொள்முதல் நிலையம் திறப்பு அதிக விலை தரும் தனியார் வியாபாரிகள்**

பள்ளிபாளையம், : பள்ளிபாளையம் அருகே அரசு நெல் கொள்முதல் நிலையம் திறக்கப்பட்டதால், விவசாயிகளின் நெல்லை அதிக விலை கொடுத்து வியாபாரிகள் வாங்கிச் செல்கின்றனர். இதனால் விவசாயிகளுக்கு கூடுதல் லாபம் கிடைத்துள்ளது.
நாமக்கல் மாவட்டம் பள்ளிபாளையம், குமாரபாளையம் ஆகிய 2 இடங்களில் நெல் கொள்முதல் நிலையம் அமைக்கப்படும் என கலெக்டர் தட்சிணாமூர்த்தி கடந்த வாரம் அறிவித்தார். இதன்படி கடந்த ஞாயிற்றுகிழமை பள்ளிபாளையம் அருகே எலந்தகுட்டை பொன்காளியம்மன் கோயிலில் முதல் கொள்முதல் நிலையம் துவக்கப்பட்டது. கலெக்டரும், தொழில்துறை அமைச்சரும் பங்கேற்று இந்த கொள்முதல் நிலையத்தை துவக்கி வைத்தனர்.
இரண்டாவது கொள்முதல் நிலையத்தை குமாரபாளையத்தில் அமைக்க இடம் தேர்வு பணிகள் நடைபெற்று வருகிறது. 2012 ல் தனியார் நெல் அரவை ஆலையில் புதிய கொள்முதல் நிலையம் துவக்கப்பட்டது. தனியார் நெல் அரவை ஆலைகளில் அரசு நெல் கொள்முதல் நிலையம் அமைக்க கூடாது என்ற உத்தரவின் காரணமாக, இந்த ஆண்டு குமாரபாளையத்தில் நெல் கொள்முதல் நிலையம் அமைக்க புதிய இடம் தேர்வு செய்வதில் தாமதம் ஏற்பட்டுள்ளது.
அரசு நெல் கொள்முதல் நிலையம் அமைக்கப்பட்டுள்ளதால் விவசாயிகளிடம்

உள்ள நெல்லை கூடுதல் விலை கொடுத்து வாங்க தனியார் வியாபாரிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர். விவசாயிகளின் வயல்களுக்கு நேரடியாக செல்லும் வியாபாரிகள் நெல்லின் தரத்தை பரிசோதித்து களத்து மேட்டிலேயே நெல்லை எடை போட்டு அதற்கான தொகைகளை கொடுத்துவிட்டு செல்கின்றனர்.
முதல் தரமான பொன்னி ரக நெல்லை கிலோ 14.15 ரூபாய்க்கு அரசு கொள்முதல் செய்கிறது. ஆனால் இந்த ரக நெல்லை வியாபாரிகள் களத்து மேட்டிலேயே 18.68 ரூபாய் கொடுத்து வாங்கி செல்கின்றனர். அரசு கொள்முதல் நிலையத்தை விட தனியார் ஆலைக்கு வியாபாரிகள் கூடுதல் விலை கொடுத்து வாங்கி செல்வதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

**மணிக்கு ரூ1800 வாடகை நெல் அறுவடை பணியில் இயந்திர பயன்பாடு அதிகரிப்பு**

பள்ளிப்பாளையம், : பள்ளிப்பாளையம் பகுதியில் நெல் அறுவடை தீவிரமடைந்துள்ளது. 25க்கும் மேற்பட்ட அறுவடை இயந்திரங்கள் மூலம் பள்ளிபாளைய விளை நிலங்களில் பணி மும்மரமாக நடைபெற்று வருகிறது. மேட்டூர் கிழக்கு கரை கால்வாய் பாசன பகுதியான பள்ளிபாளையத்தில் 10 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. கடந்த அறுவடையை விட இந்த முறை நெல் விளைச்சல் அதிகரித்துள்ளதால் சுமார் 30 ஆயிரம் டன் நெல் கிடைக்கும் என கணக்கிடப்பட்டுள்ளது.
நெல் அறுவடை பணிக்காக இடைப்பாடி, கொங்கணாபுரம் பகுதிகளில் இருந்து விவசாய கூலித்தொழிலாளர்கள் ஏராளமானோர் வந்துள்ளனர். ஒரு ஏக்கர் நெல்வயலை அறுவடை செய்து அடித்து தூற்றி கொடுக்க ஏழு மூட்டை நெல் கூலியாக தற்போது வழங்கப்பட்டு வருகிறது. இன்னும் ஒரு மாதம் அறுவடை நீடிக்குமென்பதால் வழங்கப்படும் கூலியும் அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிலையில், கூலி ஆட்களுக்கு போட்டியாக நெல் அறுவடை இயந்திரங்களும் அறுவடையில் இறங்கியுள்ளன. கரூர், ஆத்தூர், ஓசூர், கிருஷ்ணகிரி போன்ற பகுதிகளில் இருந்து தற்போது 25 அறுவடை இயந்திரங்கள் பள்ளிபாளையம், குமாரபாளையம் பகுதியில் உள்ள நெல்வயல்களை முற்றுகையிட்டுள்ளன. கூலி ஆட்களை விட இயந்திர அறுவடைக்கு செலவு குறைவாக இருக்கிறது. உடனடியாக நெல்லையும், வைக்கோலையும் பிரித்து கொடுத்து விடுவதால் விவசாயிகள் இயந்திர அறுவடையில் ஆர்வம் காட்டி வருகின்றனர். ஒரு ஏக்கர் நெல்வயலை ஒரு மணி நேரத்தில் அறுத்து நெல்லை பிரித்து கொடுத்துவிடும் இயந்திரத்துக்கு மணிக்கு ரூ1800 முதல் ரூ2 ஆயிரம் வரை வாடகை நிர்ணயம் செய்யப்படுகிறது.

**பவானி பகுதியில் நெல்அறுவடை தீவிரம் ஹெக்டருக்கு 10,800 கிலோ விளைச்சல்**

பவானி, : மேட்டூர் அணையின் மேற்கு கரை வாய்க்கால் பாசனத்தில் பரவலாக நெல் அறுவடை தீவிரமாக நடைபெற்று வருகிறது. சாதாரண நடவு முறைகளைக் காட்டிலும் திருந்திய நெல் சாகுபடியில் ஒன்றரை டன் அதிக விளைச்சல் கிடைப்பதாக வேளாண்துறை அலுவலர்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த இரு ஆண்டுகளாக போதுமான தண்ணீர் இல்லாமல் விவசாயம் பாதிக்கப்பட்டதோடு, கடும் வறட்சியும் நிலவி வந்தது. பவானி, அம்மாபேட்டை பகுதிகளில் ஆயிரக்கணக்கான தென்னை மரங்களும் பட்டுப்போயின. மேட்டூர் அணையிலிருந்து உயிர் தண்ணீர் அவ்வப்போது திறக்கப்பட்டு வந்தது.

கர்நாடக மாநிலத்தில் பெய்த கனமழையால் விரைந்து மேட்டூர் அணை நிரம்பியதால் அணையின் வாய்க்கால் பாசனத்துக்கு ஆகஸ்ட் 2ம் தேதி தண்ணீர் திறக்கப்பட்டது. இதனால், ஆர்வத்துடன் விவசாயப் பணிகளில் இறங்கிய விவசாயிகள் பரவலாக நெல் சாகுபடி மேற்கொண்டனர்.

நெல்லில் ஏடிடி 38, 30, ஐஆர் 20, பொன்னி, ஆந்திரா பொன்னி, வெள் ளைப் பொன்னி என பலரகங்களை நடவு செய்த னர். அம்மாபேட்டை வட்டாரத்தில்

2300 ஹெக்டர் நிலப்பரப்பிலும், பவானி வட்டாரத்தில் 2001 ஹெக்டர் பரப்பிலும் நெல் சாகுபடி நடைபெற்றது.

நோய் தாக்குதல் ஏற்ப ட்ட நேரங்களில் தொடர்ந்து கண்காணித்த அதிகாரிகள் அளித்த ஆலோசனையின் பேரில் நெல் பயிருக்கு பரவிய பூச்சிகள் கட்டுப்படுத்தப்பட்டன. குலை நோய் பரவலாக ஏற்பட்ட போதிலும் அதிகாரிகள் பரிந்துரைத்த மருந்துகள் அடித்து நோய் தடுக்கப்பட்டது. அம்மாபேட்டை வட்டாரத்தில் 1350 ஹெக்டரில், பவானி வட்டாரத்தில் 1500 ஹேக்டரிலும் திருந்திய நெல் சாகுபடி மேற்கொள்ளப்பட்டது.

பாசன காலம் முடிந்ததால் தற்போது மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறக்கப்படுவது நிறுத்தப்பட்டுள்ளது. வயல்களில் தேங்கியிருந்த தண்ணீர் வடிந்த நிலையில் தற்போது அறுவடை பணிகள் தீவிரமடைந்துள்ளன. இதனால், வயல்களில் களம் அமைத்து விவசாயிகள் நெற்பயிர்களை அறுத்து இயந்திரம் மூலம் அடித்து வருகின்றனர்.

சாதாரண நடவுமுறை காட்டிலும் திருந்திய நெல் சாகுபடியில் அதிக விளைச்சல் கிடைத்துள்ளது. சராசரியாக ஹெக்டருக்கு 1 முதல் 1.50 டன் வரை கூடுதல் விளைச்சல் கிடைப்பதாக விவசாயிகள் கூறுகின்றனர். அம்மாபேட்டை வட்டாரத்தில் திருந்திய நெல் சாகுபடியில் பூதப்பாடியைச் சேர்ந்த விவசாயி அதிகப்பட்சமாக ஹெக்டருக்கு 9800 கிலோ விளைச்சல் அடைந்துள்ளார். பவானி வட்டாரத்தில் காட்டூரைச் சேர்ந்த விவசாயி இதேமுறையில் ஹெக்டருக்கு 10800 கிலோ நெல் விளைச்சல் கிடைத்துள்ளது. நெல் அறுவடைக்கு கூலியாக 20 தொழிலாளர்கள் பணி புரியும் நிலையில் ஏக்கருக்கு 7 மூட்டை சராசரியாக வழங்கப்பட்டு வருகிறது.

கடந்த இரு வருடங்களாக நிலவிய வறட்சியால் தீவனத்துக்கே வழியின்றி தவித்த விவசாயிகள் நெல் வைக்கோல் ஏக்கருக்கு ரூ.8 ஆயிரம் முதல் ரூ.9 ஆயிரம் வரை விற்பனையாகி வருகிறது. ஒரே நேரத்தில் நெல் அறுவடை பரவலாக நடைபெற்று வருவதால் ஆள் மற்றும் இயந்திரங்களுக்கு தட்டுப்பாடு நிலவி வருகிறது.

கடந்த முறை ஈரோடு அருகே மாணிக்கம்பாளையம், குதிரைக்கல்மேடு பகுதியில் நுகர்பொருள் வாணிபக் கழகம் சார்பில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள்

திறக்கப்பட்டு, விவசாயிகளிடமிருந்து நெல் கொள்முதல் செய்யப்பட்டது. தற்போது நெல் அறுவடை பரவலாக நடைபெற்று வருவதால் எப்போது நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்படும் என விவசாயிகள் ஆர்வத்துடன் எதிர்பார்த்துள்ளனர்.

**நீர்மட்டம் 49 அடியாக சரிவு பவானிசாகர் அணையில் தினமும் 2 டன் மீன்பிடிப்பு**

சத்தியமங்கலம், : சத்தியமங்கலம், கோபி, பவானி உள்ளிட்ட ஈரோடு மாவட்டத்தின் முக்கிய நீராதாரமாக பவானிசாகர் அணை உள்ளது. அணை யின் நீர்மட்ட கொள்ளளவு 120 அடி. இதில் 15 அடி சேறும் சகதியுமாக உள்ளது. இந்தாண்டு பருவமழை பொய்த்து விட்டதால் அணையின் நீர்மட்டம் வெகுவாக குறைந்து நேற்றைய நிலவரப்படி 49 அடியாக சரிந்துவிட்டது. அணையில் இருந்து பாசனத்துக்கு பவானிஆற்று மதகு மூலம் 900 கனஅடி நீரும் கால்வாய் மூலம் 2300 கனஅடி  நீரும் திறந்துவிடப்படுகிறது. அணைக்கு நீர்வரத்து முற்றிலும் பாதிக்கப்பட்டு 61 கனஅடியாக உள்ளது. பவானிசாகர் அணையில் தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம் சார்பில் மீன்பிடி உரிமம் தனியாருக்கு குத்தகைக்கு விடப்பட்டுள்ளது. அணையில் 30 லட்சம் மீன் குஞ்சுகள் இருப்பு உள்ளன. இதை தவிர, தானாக உற்பத்தியாகும் மீன்குஞ்சுகளும் உண்டு.

இங்கு ரோகு, மிருகால், கட்லா, ஜிலேபி, சொ ட்டவாளை, சோலை சொட்டு போன்ற வகை மீன்கள் உள்ளன. கடந்த மே மாதம் அணையின் நீர்மட்டம் 29 அடியாக சரிந்தபோது மீன்கள் சுவாசிப்பதற்கு போதுமான பிராண வாயு இல்லாமல் திணறும் அபாயம் ஏற்பட்டது. அதைத் தொடர்ந்து, லட்சக்கணக்கான மீன்கள் உயிரிழக்கும் சூழலில் அப்போதே 70 சதவீதம் மீன்கள் பிடிக்கப்பட்டுவிட்டன. இதனால் அணையில் மீன் உற்பத்தி குறைவாகவே இருந்தது.  அதன்பிறகு, ஜூன் மாத துவக்கத்தில் பெய்த மழையாலும் பில்லூர் அணையில் இருந்த வந்த புதுவரவு நீரினாலும் அணையில் மீன்பிடிப்பு நடைபெறவில்லை. அதனைத் தொடர்ந்து, அணையில் லட்சக்கணக்கான மீன்குஞ்சுகள் விடப்பட்டு வளர்க்கப்பட்டன. அவை தற்போது 5 கிலோ எடை கொண்ட மீன்களாக வளர்ச்சி அடைந்துள்ளன.

இதனால் கட்லா, மிருகு, ரோகு போன்ற மீன்கள் அதிகளவில் பிடிக்கப்படுகின்றன.

அணையில் மீன்பிடிப்பு பணியில் 20க்கும் மேற்பட்ட மீனவர்கள் ஈடுபட்டு வருகின்றனர். கடந்த சில மாதங்களாக நாள் ஒன்றுக்கு 1 டன்னாக இருந்த மீன்வரத்து தற்போது, 2 டன்னாக அதிகரித்துள்ளது. மார்கழி மாதம் என்பதால் மீன்விற்பனை மந்தமாக உள்ளது. முதல்தர மீன் கிலோ ரூ.80க்கும் இரண்டம் தரம் கிலோ ரூ.60க்கும் விற்கப்படுகிறது. அணைப்பகுதியில் பிடிக்கப்படும் மீன்கள் அதே இடத்தில் ரக வாரியாக பிரித்து எடை போடுகின்றனர்.
அதன்பின், பிளாஸ்டிக் கூடையில் மீன்களை அடுக்கி ஐஸ்கட்டியால் பதப்படுத்தி வேன் மூலம் விற்பனைக்கு அனுப்பி வைக்கப்படுகிறது.

**மலர் சாகுபடியால் நலிவடைந்த விவசாயிகளின் பிரச்னை தீர்க்க கோரி கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம்**

ஊட்டி, : கொய்மலர் சாகுபடியில் நலிவடைந்த விவசாயிகளின் இன்னல்களை தீர்க்க கோரி ஊட்டியில் நேற்று கொய்மலர் விவசாயிகள் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள். தொடர்ந்து ஊர்வலமாக சென்று கலெக்டர் அலுவலகத்தில் மனு அளித்தனர். நீலகிரி மாவட்டத்தில் கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு தேயிலை தொழில் பாதிக்கப்பட்ட நிலையில் மாற்றுத் தொழிலாளாக கொய்மலர் சாகுபடி மேற்கொள்ள விவசாயிகளுக்கு அரசு பரிந்துரை செய்தது. இதனை ஏற்றுக் சில விவசாயிகள் வங்கியில் கடன் பெற்று கொய்மலர் சாகுபடியில் ஈடுபட்டனர். ஆனால் கொய்மலர் சாகுபடியில் ஈடுபட்ட விவசாயிகளில் 80 சதவீத்திற்கும் மேற்பட்ட விவசாயிகள் நஷ்டத்தையே சந்தித்தனர்.  காரணம் தரமான நாற்றுக்கள் கிடைக்கவில்லை. இதனால் மகசூல் மிகவும் குறைந்தது. சாகுபடி செய்த மலர்களை சந்தைப்படுத்த வசதியில்லாமல் இடைதரகர்களால் ஏமாற்றப்பட்டது, உரம் மற்றும் மருந்துகளின் விலை பன்மடங்கு அதிகரித்து உற்பத்தி செலவு அதிகரித்தது, மலர்களுக்கு நியாயமான விலை கிடைக்காதது, இயற்கையின் சீற்றத்தால் பசுமை குடில்களும், அதனுள் இருக்கும் மலர் செடிகளும் சேதமடைந்தது மற்றும் போதிய வழிகாட்டுதல் இன்றி துவக்கப்பட்ட கொய்மலர் சாகுபடியில் பலர் நஷ்டத்தையே சந்தித்தனர். இதனால் மலர் சாகுபடியில் ஈடுபட்ட பலர் இந்த தொழிலை விட்டு விட்டனர்.

சிலர் வங்கிகளில் வாங்கிய கடன்களை திருப்பி செலுத்த முடியாமல் கடும் அவதிக்குள்ளாகியுள்ளனர். இந்நிலையில் மலர் சாகுபடியில் ஈடுபட்டு நலிவடைந்த விவசாயிகள், கொய்மலர் சாகுபடியில் தாங்கள் சந்தித்து வரும் இன்னல்களை தீர்க்க வலியுறுத்தி மத்திய, மாநில அரசுகளின் கவனத்தை ஈர்க்கும் நேற்று ஊட்டி ஏ.டி.சி., சுதந்திர திடலில் கவன ஈர்ப்பு ஆர்பாட்டத்தில் ஈடுபட்டனர். ஆர்பாட்டத்திற்கு நீலகிரி மாவட்ட மலர் சாகுபடி சிறு விவசாயிகள் சங்க தலைவர் விஸ்வநாதன், செயலாளர் கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் தலைமை தாங்கினார்கள். மலர் சாகுபடி விவசாயிகளின் கோரிக்கைகளை தீர்க்க கோரி கொஷங்கள் எழுப்பப்பட்டன. தொடர்ந்து அங்கிருந்து மணிக்கூண்டு, கமர்சியல் சாலை, கேசினோ சந்திப்பு வழியாக கலெக்டர் அலுவலகம் சென்று கலெக்டரிடம் கோரிக்கை மனு அளித்தனர். இதில் சுமார் 100க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர்.

**பசுந்தேயிலை விலை உயருமா? விவசாயிகள் எதிர்பார்ப்பு**

குன்னூர், : நீலகிரி மாவட்டத்தில் உற்பத்தியாகும் பெரும்பாலான தேயிலை தூள் குன்னூரிலுள்ள அரசு மற்றும் தனியார் ஏல மையங்கள் மூலம் விற்பனை செய்யப்படுகிறது. இதில் விற்பனையாகும் தேயிலை தூளின் விலைக்கு ஏற்றார் போல் பசுந்தேயிலைக்கு உண்டான விலையை உற்பத்தியாளர்கள் நிர்ணயம் செய்து விவசாயிகளுக்கு வழங்குகின்றனர். கடந்த சில மாதங்களாக வார விலையில் முன்னுக்கு பின் முரணாக உற்பத்தியாளர்கள் செயல்படுவதாக விவசாயிகள் குற்றம் சாட்டி வருகின்றனர். இந்த வாரம் சாதாரண ரக பசுந்தேயிலை கிலோ ஒன்றுக்கு ரூ.15, நடுத்தரத்திற்கு ரூ.19, உயர் ரகத்திற்கு ரூ.23 விலை வழங்கப்பட்டுள்ளது.  கடந்த வாரத்தை விட இந்த வாரம் பசுந்தேயிலைக்கு கிலோ ஒன்றுக்கு ரூ.1 கூடுதலாக விலை வழங்கப்பட்டுள்ளது. பனியின் தாக்கத்தால் பெரும்பாலான தேயிலை தோட்டங்களில் மகசூல் குறைந்துள்ளது. கடந்த வாரம் நடந்த தேயிலை ஏலத்தில் தேயிலை தூள் விற்பனை அதிகரிப்பதுடன் அதன் விலையும் உயர்ந்தது.

**வானி பகுதியில் நெல்அறுவடை தீவிரம் ஹெக்டருக்கு 10,800 கிலோ விளைச்சல்**

பவானி, : மேட்டூர் அணையின் மேற்கு கரை வாய்க்கால் பாசனத்தில் பரவலாக நெல் அறுவடை தீவிரமாக நடைபெற்று வருகிறது. சாதாரண நடவு முறைகளைக் காட்டிலும் திருந்திய நெல் சாகுபடியில் ஒன்றரை டன் அதிக விளைச்சல் கிடைப்பதாக வேளாண்துறை அலுவலர்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த இரு ஆண்டுகளாக போதுமான தண்ணீர் இல்லாமல் விவசாயம் பாதிக்கப்பட்டதோடு, கடும் வறட்சியும் நிலவி வந்தது. பவானி, அம்மாபேட்டை பகுதிகளில் ஆயிரக்கணக்கான தென்னை மரங்களும் பட்டுப்போயின. மேட்டூர் அணையிலிருந்து உயிர் தண்ணீர் அவ்வப்போது திறக்கப்பட்டு வந்தது.

கர்நாடக மாநிலத்தில் பெய்த கனமழையால் விரைந்து மேட்டூர் அணை நிரம்பியதால் அணையின் வாய்க்கால் பாசனத்துக்கு ஆகஸ்ட் 2ம் தேதி தண்ணீர் திறக்கப்பட்டது. இதனால், ஆர்வத்துடன் விவசாயப் பணிகளில் இறங்கிய விவசாயிகள் பரவலாக நெல் சாகுபடி மேற்கொண்டனர்.

நெல்லில் ஏடிடி 38, 30, ஐஆர் 20, பொன்னி, ஆந்திரா பொன்னி, வெள் ளைப் பொன்னி என பலரகங்களை நடவு செய்த னர். அம்மாபேட்டை வட்டாரத்தில் 2300 ஹெக்டர் நிலப்பரப்பிலும், பவானி வட்டாரத்தில் 2001 ஹெக்டர் பரப்பிலும் நெல் சாகுபடி நடைபெற்றது.

நோய் தாக்குதல் ஏற்ப ட்ட நேரங்களில் தொடர்ந்து கண்காணித்த அதிகாரிகள் அளித்த ஆலோசனையின் பேரில் நெல் பயிருக்கு பரவிய பூச்சிகள் கட்டுப்படுத்தப்பட்டன. குலை நோய் பரவலாக ஏற்பட்ட போதிலும் அதிகாரிகள் பரிந்துரைத்த மருந்துகள் அடித்து நோய் தடுக்கப்பட்டது. அம்மாபேட்டை வட்டாரத்தில் 1350 ஹெக்டரில், பவானி வட்டாரத்தில் 1500 ஹேக்டரிலும் திருந்திய நெல் சாகுபடி மேற்கொள்ளப்பட்டது.

பாசன காலம் முடிந்ததால் தற்போது மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறக்கப்படுவது நிறுத்தப்பட்டுள்ளது. வயல்களில் தேங்கியிருந்த தண்ணீர் வடிந்த நிலையில் தற்போது அறுவடை பணிகள் தீவிரமடைந்துள்ளன. இதனால், வயல்களில் களம் அமைத்து விவசாயிகள் நெற்பயிர்களை அறுத்து இயந்திரம் மூலம் அடித்து வருகின்றனர்.

சாதாரண நடவுமுறை காட்டிலும் திருந்திய நெல் சாகுபடியில் அதிக விளைச்சல் கிடைத்துள்ளது. சராசரியாக ஹெக்டருக்கு 1 முதல் 1.50 டன் வரை கூடுதல் விளைச்சல் கிடைப்பதாக விவசாயிகள் கூறுகின்றனர். அம்மாபேட்டை வட்டாரத்தில் திருந்திய நெல் சாகுபடியில் பூதப்பாடியைச் சேர்ந்த விவசாயி அதிகப்பட்சமாக ஹெக்டருக்கு 9800 கிலோ விளைச்சல் அடைந்துள்ளார்.
பவானி வட்டாரத்தில் காட்டூரைச் சேர்ந்த விவசாயி இதேமுறையில் ஹெக்டருக்கு 10800 கிலோ நெல் விளைச்சல் கிடைத்துள்ளது. நெல் அறுவடைக்கு கூலியாக 20 தொழிலாளர்கள் பணி புரியும் நிலையில் ஏக்கருக்கு 7 மூட்டை சராசரியாக வழங்கப்பட்டு வருகிறது.
கடந்த இரு வருடங்களாக நிலவிய வறட்சியால் தீவனத்துக்கே வழியின்றி தவித்த விவசாயிகள் நெல் வைக்கோல் ஏக்கருக்கு ரூ.8 ஆயிரம் முதல் ரூ.9 ஆயிரம் வரை விற்பனையாகி வருகிறது. ஒரே நேரத்தில் நெல் அறுவடை பரவலாக நடைபெற்று வருவதால் ஆள் மற்றும் இயந்திரங்களுக்கு தட்டுப்பாடு நிலவி வருகிறது.
கடந்த முறை ஈரோடு அருகே மாணிக்கம்பாளையம், குதிரைக்கல்மேடு பகுதியில் நுகர்பொருள் வாணிபக் கழகம் சார்பில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு, விவசாயிகளிடமிருந்து நெல் கொள்முதல் செய்யப்பட்டது.
தற்போது நெல் அறுவடை பரவலாக நடைபெற்று வருவதால் எப்போது நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்படும் என விவசாயிகள் ஆர்வத்துடன் எதிர்பார்த்துள்ளனர்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**ஆந்திரா, கர்நாடகாவில் இருந்து வரத்து அதிகரிப்பு: கோயம்பேடு சந்தையில் தக்காளி விலை வீழ்ச்சி தேங்காய், முருங்கைக்காய் தொடர்ந்து விலை உயர்வு**



சென்னை

ஆந்திரா, கர்நாடகாவில் இருந்து வரத்து அதிகரித்துள்ளதால் கோயம்பேடு சந்தையில் காய்கறிகளின் விலை கடும் வீழ்ச்சியடைந்துள்ளது. தேங்காய், முருங்கைகாய் விலை தொடர்ந்து உயர்ந்து காணப்படுகிறது.

<u>ஒரு மாதத்துக்கு முன்பு...</u>

தமிழகத்தில் கடந்த ஒரு மாதத்துக்கு முன்பு வரை காய்கறிகளின் விலை உச்சத்தில் இருந்து வந்தது. தமிழகத்தில் போதிய மழை இல்லாத காரணத்தினாலும், அண்டை மற்றும் வெளிமாநிலங்களில் இருந்து காய்கறிகள் வரத்து குறைந்து காணப்பட்டதாலும் விலை உயர்ந்து காணப்பட்டது.

குறிப்பாக சாம்பார் வெங்காயம் (கிலோ ஒன்றுக்கு ரூ.100), பல்லாரி வெங்காயம் (ரூ.50), தக்காளி (ரூ.50) போன்ற அத்தியாவசிய பொருட்களின் விலை அதிகமாக காணப்பட்டது.

காய்கறிகள் வரத்து அதிகரிப்பு

இந்த நிலையில் பொங்கல் பண்டிகை நெருங்கி வரும் சமயத்தில், ஆந்திரா மற்றும் கர்நாடகா மாநிலங்களில் வடகிழக்கு பருவமழை பெய்த பிறகு, பயிரிடப்பட்ட காய்கறிகளின் அறுவடை தற்போது தொடங்கி விட்ட காரணத்தினால் சென்னை கோயம்பேடு சந்தைக்கு காய்கறிகளின் வரத்து அதிகரித்து காணப்படுகிறது.

இதனால் கோயம்பேடு சந்தையில் காய்கறிகளின் விலை கடும் வீழ்ச்சியடைந்துள்ளது. கடந்த மாதத்தில் சாம்பார் வெங்காயம் கிலோ ஒன்றுக்கு ரூ.100 வரை விற்பனை செய்யப்பட்டது. ஆனால் தற்போது அதன் விலை மிகவும் சரிந்து ரூ.30–க்கு விற்பனை செய்யப்படுகிறது.

தக்காளி

அதே போல், தக்காளியின் விலை கடும் வீழ்ச்சி அடைந்துள்ளது. கடந்த மாதத்தில் முதல் ரக தக்காளி கிலோ ஒன்றுக்கு ரூ.50–க்கும், 2–வது ரக தக்காளி ரூ.40–க்கும் விற்பனை செய்யப்பட்டு வந்தது.

தக்காளி வரத்து அதிகம் காரணமாக பெட்டி (15 கிலோ) ரூ.80–க்கும், முதல் ரக தக்காளி கிலோ ஒன்றுக்கு ரூ.6–ம், 2–வது ரக தக்காளி ஒரு கிலோ ரூ.5–க்கும் விற்பனை செய்யப்படுகிறது.

தேங்காய், முருங்கைக்காய் விலை உயர்வு

மேலும் பல்லாரி வெங்காயம் ரூ.20–க்கும், பீன்ஸ் ரூ.15–க்கும், கேரட் ரூ.12–க்கும், நூக்கல் ரூ.8–க்கும், சவ்சவ் ரூ.8–க்கும், பீட்ரூட் ரூ.18–க்கும், முட்டைக்கோஸ் ரூ.10–க்கும், மிளகாய் ரூ.10–க்கும், சேனைக்கிழங்கு ரூ.10–க்கும், கத்தரிக்காய்

ரூ.10–க்கும், புடலங்காய் ரூ.13–க்கும், காலிபிளவர் ரூ.10–க்கும் விற்பனை செய்யப்படுகிறது. ஒரு பக்கம் காய்கறிகளின் விலைகளில் வீழ்ச்சி காணப்பட்டாலும், தேங்காய் மற்றும் முருங்கைக்காய் ஆகியவற்றின் விலை தொடர்ந்து உயர்ந்தே காணப்படுகிறது. தேங்காய் ஒன்றின் விலை ரூ.20–க்கும், முருங்கைக்காய் கிலோ ரூ.170–க்கும், காய் ஒன்று ரூ.15–க்கும் விற்பனை செய்யப்படுகிறது.

பச்சை மொச்சை

தற்போது நிலவும் பனிப்பொழிவின் காரணமாக தேங்காய் விளைச்சல் குறைவதாலும், முருங்கை பூ உதிர்வதாலும் தான் இதன் விலை அதிகமாக காணப்படுகிறது என்று வியாபாரிகள் தெரிவித்தனர்.

கோயம்பேடு காய்கறி சந்தையில் புது வரத்தாக பச்சை மொச்சை விற்பனைக்கு வந்துள்ளது. கிலோ ஒன்றுக்கு ரூ.25–க்கு விற்பனை செய்யப்படுகிறது. நாள் ஒன்றுக்கு 5 லாரிகள் வந்து கொண்டிருப்பதாகவும், அடுத்த வாரத்திற்குள் நாள் ஒன்றுக்கு 10 லாரிகள் வரை வரும் என்று கோயம்பேடு சந்தை வியாபாரிகள் சங்க ஆலோசகர் சவுந்தரராஜன் தெரிவித்தார்.

**பள்ளிபாளையத்தில் கரும்புடன் விவசாயிகள் ஆர்ப்பாட்டம்**



பள்ளிபாளையம், -

பள்ளிபாளையத்தில் கோரிக்கைகளை வலி யுறுத்தி கரும்புடன் விவசாயிகள் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

கரும்புடன் ஆர்ப்பாட்டம்

மத்திய, மாநில அரசுகள் கரும்புக்கு விலை குறைவாக அறிவித்ததை கண்டித்து, தமிழ்நாடு கரும்பு விவசாயிகள் சங்கத்தின் சார்பில் பள்ளிபாளையம் பொன்னி சர்க்கரை ஆலை முன்பு நேற்று காலை ஆர்ப்பாட்டம் நடை பெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்துக்கு சங்கத்தின் தலைவர் முத்து சாமி தலைமை தாங்கினார். சிறப்பு அழைப்பாளர்களாக மாநில துணைத் தலைவர் நல்லாக்கவுண்டர், துணைச் செயலாளர் மதுசூதனன் ஆகியோர் கலந்துகொண்டு கோரிக்கைகளை வலியுறுத்தி பேசினார்கள்.

ரூ.4 ஆயிரம் வழங்க வேண்டும்

ஆர்ப்பாட்டத்தில் விவசாயி கள் கரும்புடன் கலந்து கொண்டு, கரும்பு டன்னுக்கு ரூ.4 ஆயிரம் வழங்க வேண்டும், முத்தரப்பு கூட்டத்தை மத்திய அரசு கூட்ட வேண்டும், வெட்டுக்கூலியை ஆலை நிர்வாகமே ஏற்க வேண்டும். கரும்புக்கான கட்டுப்பாட்டு சங்கத்தை கலைக்க கூடாது என்பது உள்ளிட்ட கோஷங் களை எழுப்பினார்கள். இதில் விவசாயிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

**குன்னூர் ஏல மையத்தில் தேயிலை தூள் விலை உயர்வு**



குன்னூர் ஏல மையத்தில் தேயிலைதூள்விலை உயர்ந்தது.

2 ரூபாய் விலை உயர்வு

குன்னூர் ஏல மையத்தில் இந்த ஆண்டின் முதல் ஏலம் கடந்த 2, 3 ஆகிய தேதிகளில் நடைபெற்றது. இந்த ஏலத்திற்கு மொத்தம் 14 லட்சத்து 86 ஆயிரம் கிலோ தேயிலை தூள் வந்தது. இதில் 10 லட்சத்து 9 ஆயிரம் கிலோ இலை ரகமாக வும், 4 லட்சத்து 77 ஆயிரம் கிலோ டஸ்ட் ரகமாகவும் இருந்தது. இந்த ஏலத்தில் 86 சதவீத தேயிலை தூள் விற்பனை ஆனது. தேயிலை தூளுக்கு தேவை அதிகரித்து இருந்ததால் அனைத்து தேயிலை தூள் ரகங்களுக்கும் 2 ரூபாய் விலை உயர்வு ஏற்பட்டது.சி.டி.சி. தேயிலை தூளின் உயர்ந்த பட்ச விலையாக 200 ரூபாயும், ஆர்தோடக்ஸ் தேயிலை தூள் 300 ரூபாய் என்று உயர்ந்த பட்ச விலையாக ஏலம் சென் றது.

இலை ரக தேயிலை தூள் : சராசரி விலையாக இலை ரக தேயிலை தூளின் சாதாரண வகை 55 ரூபாயில் இருந்து 60 ரூபாய் வரையிலும், விலை உயர்ந்த தேயிலை தூள் 100 ரூபாயில் இருந்து 160 ரூபாய் வரையிலும் ஏலம் சென்றது.டஸ்ட் ரக தேயிலை தூளின் சாதாரண வகை 65 ரூபாயில் இருந்து 67 ரூபாய் வரையிலும், விலை உயர்ந்த தேயிலை தூள் 120 ரூபாயில் இருந்து 180 ரூபாய் வரையிலும் ஏலம் சென்றது.விற்பனை எண் 2-க்கான ஏலம் வருகிற 9, 10 ஆகிய தேதிகளில் நடக்கி றது. இந்த ஏலத்திற்கு மொத்தம் 18 லட்சத்து 42 ஆயிரம் கிலோ தேயிலை தூள் வருகிறது.

**கரும்பு டன் ஒன்றுக்கு ரூ.4 ஆயிரம் வழங்கக்கோரி விவசாயிகள் ஆர்ப்பாட்டம்**




மன்னார்குடி,

கரும்பு டன் ஒன்றுக்கு ரூ.4 ஆயிரம் வழங்கக் கோரி விவசாயிகள் ஆர்ப் பாட்டம் செய்தனர்.

ஆர்ப்பாட்டம்

திருவாரூர் மாவட்டம் மன் னார்குடி உதவி கலெக்டர் அலுவலகம் முன்பு நேற்று கரும்பு டன் ஒன்றுக்கு ரூ.4 ஆயிரம் வழங்க வேண்டும், சர்க்கரை இறக்குமதிக்கு தடை விதிக்க வேண்டும் என்பன போன்ற கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழ்நாடு கரும்பு விவசாயிகள் சங்கம் சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.ஆர்ப்பாட்டத்திற்கு ஆலை மட்ட தலைவர் தம்புசாமி தலைமை தாங்கினார். ஆலை மட்ட செயலாளர் காதர் உசேன் முன்னிலை வகித் தார். ஆர்ப்பாட்டத்தில் இறக்கு மதி வரியை 15 சதவீதத்தில் இருந்து 40 சதவீதமாக உயர்த்தவேண்டும், கூட்டுறவு சர்க்கரை ஆலைகளை உட னடியாக புணரமைக்க வேண் டும் என்பன போன்ற கோரிக்கைகளை வலியுறுத்தி விவசாயிகள் கோஷங்கள் எழுப்பினார்கள்.

விவசாயிகள் சங்க மாவட்ட செயலாளர் சுந்தரமூர்த்தி கோரிக்கைகளை வலியுறுத்தி பேசினார். ஆர்ப்பாட்டத்தில் கரும்பு விவசாயிகள் சங்க மாவட்ட தலைவர் அக்பர்தீன், தென்னைவிவசாயிகள் சங்க மாவட்ட செயலாளர் சுப்பிர மணியன், பால் உற்பத்தியாளர் சங்க

**பொங்கல் பண்டிகையை முன்னிட்டு சிறுபாக்கம் பகுதியில் மஞ்சள் அறுவடைக்கு தயார்**



சிறுபாக்கம் பகுதியில் பொங்கல் பண்டிகைக்கான மஞ்சள் குலைகள் அறுவடைக்கு தயார் நிலையில் உள்ளது.

## மஞ்சள் மகத்துவம்

மருத்துவ மூலிகைகளின் ஒன்றாக மஞ்சள் செடியின் கிழங்கு நறுமணப் பொருள் தயார் செய்யவும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. அது மட்டுமின்றி இந்துக்கள் மத சடங்குகளின் போது மஞ்சளை புனிதப் பொருளாக உபயோகிப்பதை வழக்கமாக கொண்டு வருகின்றனர்.

ஏனெனில் மங்கலப் பொருள்களில் மகாலட்சுமியின் அம்சமாகத் திகழும் மகிமை மஞ்சளுக்கு உள்ளது. அதோடு மஞ்சள் இருக்கும் இடத்தில் திருமகள் வாசம் செய்கிறாள் என்பது முன்னோர்களின் செல்லாகும்.

## பொங்கலில் மஞ்சள்

இதற்கேற்ப தான் எந்த ஒரு பூஜை என்றாலும் மஞ்சளால் செய்த பிள்ளையாரை வணங்குவதை நம் தமிழர்கள் வழக்கமாக கொண்டு வருகின்றனர். இதேபோல் எத்தனையோ சிறப்புகளை தன்னகத்தை கொண்டுள்ள மஞ்சள் செடியானது, பொங்கல் பண்டிகையிலும் முக்கிய அங்கம் வகிக்கிறது.

பொங்கல் பண்டிகையின் போது, மஞ்சள் கிழங்குச் செடியை கொத்தாக புதுப்பானையில் கட்டி அடுப்பில் ஏற்றி பொங்கல் இடுவார்கள். இதை பத்திரப்படுத்தி மறுநாள் காலையில், மஞ்சள் கீறுதல் என்னும் சடங்காகச்செய்வது கிராமப்புறங்களில் கடைபிடிக்க பட்டு வருகிறது. இதன் வாயிலாக வீட்டில் உள்ள அனைவரும் சீரும் சிறப்பும் பெற்று வாழ்வார்கள் என்பதாகும்.

## அறுவடைக்கு தயார்

இவ்வாறு பொங்கல் பண்டிகையில் சிறப்புமிக்க மஞ்சள் செடியானது தற்போது கடலூர் மாவட்டம் மங்களூர் பகுதியில் பயிரிடப்பட்டு, அறுவடைக்கு தயாரகி வருகிறது. நடப்பு ஆண்டில் சுமார் 600 ஹெக்டேர் வரையில் மஞ்சள் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இவைகள்

கடந்த ஜூன் மாதம் பயிரிடப்பட்ட மஞ்சள் தற்போது நன்கு விளைந்து நிற்பதால் எதிர்வரும் பொங்கல் பண்டிகையை கருத்தில் கொண்டு விவசாயிகள் அறுவடையை தொடங்க உள்ளனர்.

இங்கு அறுவடை செய்யப்படும் மஞ்சள் சேலம், ஆத்தூர், விழுப்புரம், கள்ளக்குறிச்சி போன்ற பகுதிகளுக்கு விற்பனைக்காக எடுத்து செல்லப்பட உள்ளது. லெட்சுமி கடாசம் நிறைந்து உள்ளதாக கூறப்பட்டு வருகிறது மஞ்சள். ஆனால் இதை பயிர்செய்யும் விவசாயிகள் வாழ்க்கையில் தான் லெட்சுமி செழிப்பதற்கு ஒவ்வொரு ஆண்டும் வழியில்லாமல் இருந்து வருகிறது.

நடப்பு ஆண்டில் இவர்களிடத்தில் லட்சுமிபொழிக்குமா என்பதே தற்போது விவசாயிகளின் ஏக்கமாகும்.

**பட்டிவீரன்பட்டி பகுதியில் பருவமழை பொய்த்ததால் 15 ஆயிரம் ஏக்கரில் நெல் விவசாயம் பாதிப்பு**



பட்டிவீரன்பட்டி, -

பட்டிவீரன்பட்டி பகுதிகளில் பருவமழை பொய்த்து போனதால், 15 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் நெல் விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளது.

<u>15 ஆயிரம் ஏக்கர்</u>

திண்டுக்கல் மாவட்டம் பட்டிவீரன்பட்டி, அய்யம்பாளையம், சித்தரேவு, அய்யன்கோட்டை, சித்தையன்கோட்டை பகுதிகளில் டிசம்பர், ஜனவரி மாதங்களில் நெல் அறுவடை பணிகள் மும்முரமாக நடக்கும். ஆனால் இந்த ஆண்டு பருவமழை பொய்த்து போனதால் 15 ஆயிரம் ஏக்கருக்கும் மேல் நெல்

விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளது. அய்யம்பாளையம் மருதாநதி அணை, ஆத்தூர் காமராஜர் அணைகளில் குறைந்த அளவே தண்ணீர் இருக்கிறது. இந்த தண்ணீர் குடிநீர் தேவைக்காக தேக்கி வைக்கப்பட்டுள்ளது. அதனால் இந்த தண்ணீரை கொண்டு விவசாயம் செய்ய முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

## விவசாயிகள் கண்ணீர்

வழக்கமாக இந்த பகுதிகளில் பயிர் செய்யப்பட்டு இருக்கும் நிலங்களில் இருந்து லட்சக்கணக்கான மூட்டை நெல் அறுவடை ஆகும். ஆனால் தற்போது பயிர்கள் காய்ந்து வருவதை பார்த்த விவசாயிகள் கண்ணீர் வடித்து வருகின்றனர். நவம்பர் மாதம் பெய்த மழையை நம்பி தாமரைக்குளம் பகுதிகளில் 75 ஏக்கர் பரப்பளவில் நெல் சாகுபடி செய்யப்பட்டது. இதில் ஏக்கருக்கு ரூ.25 ஆயிரம் வரை செலவானது.

100 நாட்கள் விளையக்கூடிய நெல் பயிர் தற்போது 30 நாட்களை கடந்த நிலையில் காய தொடங்கி உள்ளது. இன்னும் 70 நாட்கள் வளர வேண்டிய பயிரை காப்பாற்ற விவசாயிகள் போராடி வருகின்றனர். மேலும் ஆழ்குழாய்களில் இருக்கும் கொஞ்சம் தண்ணீரையும் நெல்லுக்கு பயன்படுத்துகின்றனர். இந்த ஆண்டு மழை சரியாக பெய்திருந்தால், அறுவடை பணிகள் நடக்க வேண்டிய பகுதிகள் தற்போது வறண்டு காணப்படுகின்றன.

**டன் ஒன்றுக்கு ரூ.4ஆயிரம் கேட்டு கரும்பு விவசாயிகள் காதில் பூ சுற்றி ஆர்ப்பாட்டம்**

திருப்புவனம், கரும்பு டன் ஒன்றுக்கு ரூ.4ஆயிரம் கேட்டு கரும்பு விவசாயிகள் திருப்பாசேத்தியில் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

## **காதில் பூ சுற்றி போராட்டம்**

சிவகங்கை மாவட்டம் திருப்பாச்சேத்தியில் கரும்பு விவசாயிகள் சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்ட செயலாளர் சக்திவேல் தலைமை தாங்கினார். ஆர்ப்பாட்டத்தை விவசாய தொழிலாளர் சங்க மாவட்ட

செயலாளர் தண்டியப்பன் தொடங்கி வைத்தார். தமிழ்நாடு விவசாய சங்க மாவட்ட செயலாளர் வீரபாண்டி சிறப்புரையாற்றினார்.

ஆர்ப்பாட்டத்தில் பாண்டி, முத்தையா, நீலமேகம், ராமு உள்பட பலர் கலந்து கொண்டனர். இதில் பங்கேற்றவர்கள் காதில் பூ சுற்றி இருந்தனர். ஆர்ப்பாட்டத்தில், மத்திய, மாநில அரசுகள் கரும்பு டன் ஒன்றுக்கு ரூ.4 ஆயிரம் வழங்க வேண்டும். சக்தி சர்க்கரை ஆலை நிர்வாகம் விவசாயிகளிடம் வங்கி கடன்களுக்காக பிடித்த ரூ.40கோடியை வங்கியில் கட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். அனைத்து ஆலைகளிலும் எத்தனால் உற்பத்தி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். வறட்சியால் பாதித்த கரும்பு டன்னுக்கு ரூ.2 ஆயிரத்து 500 வழங்க வேண்டும். அனைத்து விவசாய பாசன கிணறுகளுக்கு மின் இணைப்பு உடனடியாக வழங்க வேண்டும். ஆழ்குழாய் கிணறு அமைக்க விவசாயிகளுக்கு மானியத்துடன் கடனுதவி வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டன.

**அதிக வருமானம் தரும் பட்டு வளர்ப்பு தொழில்**



கன்னியாகுமரி,

பட்டு வளர்ப்பு தொழிலானது பணத்தை அள்ளிதருகிற தொழில் ஆகும். தற்பொழுது பட்டு வளர்ப்பு தொழிலானது வேலைப்பளுவை குறைத்து, அதிக வருமானத்தை அள்ளித்தரும்படி விவசாயிகள் மிக எளிதாக மேற்கொள்ளும் வகையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. விவசாயிகள் சந்திக்கும் 3 முக்கியமான பிரச்சினைகளான வருமானம், ஆள்பற்றாக்குறை, தண்ணீர் பற்றாக்குறை

ஆகியவற்றை தீர்க்கும்வகையில் அதிக வருமானம், குறைந்த ஆட்கள், சொட்டுநீர் பாசனம் என்று பட்டு வளர்ப்பு தொழில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

நிகர லாபம்

பட்டு வளர்ப்பு தொழில் வேறு எந்த விவசாயத்தை காட்டிலும் ஆண்டிற்கு, ஒரு ஏக்கருக்கு நிகர லாபமாக குறைந்த பட்சம் ரூ.1 லட்சத்துக்கு மேல் வருமானம் பெறலாம். வீட்டில் உள்ள இரண்டு அல்லது மூன்று நபர்கள் போதுமானது. சொட்டுநீர்ப்பாசனம் மூலம் அதிக அளவு பரப்பை குறைந்த நேரத்தில் பாசனம் செய்து ஆண்டு முழுவதும் அதிக வருமானம் பெறலாம்.

விவசாயிகள் உடனடியாக பட்டு வளர்ப்பு தொழிலை மேற்கொள்வதற்கும், தொடர்ந்து இந்த தொழிலை செய்து வாழ்க்கை தரத்தை மேம்படுத்திக்கொள்ளவும், தமிழ்நாடு அரசு கீழ்கண்ட அரசு நலத்திட்ட மானியஉதவிகளை வழங்குகிறது.

மானிய உதவிகள்

* மல்பரி நாற்று நடவு செய்ய ஒரு ஏக்கருக்கு மானியம் ரூ.10,500 வழங்கப்படும்.

* குறு,சிறு விவசாயிகளுக்கு சொட்டு நீர்ப்பாசனத்துக்கு ஒரு ஏக்கருக்கு மானியம் ரூ.30 ஆயிரமும், பெரிய விவசாயிகளுக்கு ரூ.22 ஆயிரத்து 500–ம் வழங்கப்படும். ஒரு விவசாயி அதிகபட்சமாக 5.00 ஏக்கர் வரை மானியம் பெறலாம்.

* முதல்நிலை புழுவளர்ப்பு மனை கட்டுவதற்கு ரூ.82,500–ம், இரண்டாம் நிலைக்கு ரூ.87,500–ம், 3–ம் நிலைக்கு ரூ.63 ஆயிரமும் மானியம் வழங்கப்படும்.

* புழுவளர்ப்பு உபகரணங்கள் கொள்முதலுக்கு ரூ.52,500 மானியம் வழங்கப்படும்.

* மல்பரி மரங்களை தோட்டத்தைசுற்றி வளர்ப்பதற்கு 100 மரங்களுக்கு ரூ.3,497 மானியம் வழங்கப்படும்.

* வெண்பட்டு வளர்ப்புக்கு இலவச பயிற்சி எடுக்க ஒரு விவசாயிக்கு ரூ.5 ஆயிரம் மானியம் வழங்கப்படும்.

மேலும் விவரங்களுக்கு தென்காசியில் உள்ள பட்டு வளர்ச்சித்துறை அலுவலகத்தை தொடர்பு கொள்ளலாம். போன்– 04633–222448.

**கரும்பு டன்னுக்கு ரூ.4 ஆயிரம் வழங்கக்கோரி தஞ்சையில் விவசாயிகள் கறுப்புக்கொடி ஏந்தி ஆர்ப்பாட்டம்**




தஞ்சாவூர்,

தஞ்சையில் கரும்பு டன்னுக்கு ரூ.4 ஆயிரம் வழங்கக்கோரி விவசாயிகள் கறுப்புக்கொடி ஏந்தி ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

<u>கரும்பு விவசாயிகள்</u>

தஞ்சையில் உள்ள அனைத்து விவசாய சங்கங்கள் கூட்டமைப்பு சார்பில் ஆர்ப்பாட்டம் தஞ்சையில் நேற்று நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்திற்கு தஞ்சை மாவட்ட விவசாயிகள் சங்க தலைவர் சுகுமாறன், செயலாளர் சக்திவேல் ஆகியோர் தலைமை தாங்கினார். ஜெயபால், லோகநாதன், சந்திரசேகரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் கரும்பு டன் ஒன்றுக்கு ரூ.4 ஆயிரம் வழங்க வேண்டும். கரும்பு வெட்டு கூலியை ஆலை நிர்வாகமே ஏற்றுக்கொள்ள வேண்டும். கரும்பு நடவு செய்ய வங்கிக்கடன் வட்டியில்லா கடனாக ஏக்கர் ஒன்றுக்கு ரூ.60 ஆயிரம் வழங்க

வேண்டும். கரும்பு வெட்ட உத்தரவு கொடுத்து கரும்பு வெட்டியவுடன் 15 நாட்களுக்குள் பணம் பாக்கி இல்லாமல் பட்டுவாடா செய்யப்பட வேண்டும்.

மராட்டிய மாநிலத்தில் உள்ளது போல் கரும்பு அரவைக்கு சப்ளை செய்யும் விவசாயிகளுக்கு டன் ஒன்றுக்கு அரைகிலோ வீதம் சீனி தீபாவளி, பொங்கல் பண்டிகை நாட்களில் இலவசமாக வழங்க வேண்டும். விவசாயிகள் வாங்கிய கடனுக்காக ஜப்தி நடவடிக்கையில் ஈடுபடுவதை வங்கிகள் கைவிட வேண்டும் என்பது உள்பட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தினர்.

<u>கறுப்புக்கொடி</u>

ஆர்ப்பாட்டத்தில் விவசாய சங்க நிர்வாகிகள் ராமலிங்கம், ரவி, ரவிச்சந்திரன், மோகனசுந்தரம், ரவிராஜ், திருநாவுக்கரசு, சாரங்கபாணி, சீனிவாசன், சோமு உள்பட ஏராளமான விவசாயிகள் கலந்து கொண்டனர். ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கறுப்புக்கொடி ஏந்தியும், கரும்புகளை ஏந்தியும் கோஷமிட்டனர்.

**வரலாறு காணாத வகையில் அமெரிக்காவில் உறைபனி நீடிப்பு; பள்ளிகள், அலுவலகங்கள் மூடப்பட்டன**



சிகாகோ,

அமெரிக்காவில் வரலாறு காணாத வகையில் உறைபனி நீடிப்பதால் அரசு அலுவலகங்கள், பள்ளிகள், வர்த்தக நிறுவனங்கள் மூடி கிடக்கின்றன. கடும் குளிர் தாங்காமல் மேலும் 4 பேர் இறந்தனர். 4,392 விமானங்கள் ரத்து செய்யப்பட்டன.

## கடும் உறைபனி

அமெரிக்காவின் வடகிழக்கு மாகாணங்களில் கடந்த வாரம் கடுமையாக பனி கொட்டியது. இதனால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது. 2 அடி உயரம் வரையில் பனி கொட்டி கிடந்தது.இதேபோன்ற வானிலைநிலை ஞாயிற்றுக்கிழமையும், திங்கட்கிழமையும் நீடித்தது. அதாவது கடந்த 20 ஆண்டுகள் இல்லாத வகையில் உறைபனி கொட்டியது. உஷ்ணநிலை மைனஸ் 11 டிகிரி முதல் 40 டிகிரி செல்சியஸ் வரையில் காணப்பட்டது. துருவப்பகுதியில் நிலவும் உறைபனி பொழிவு போல இது இருந்தது.

## அரசு அலுவலகம்–பள்ளிகள் மூடல்

இதனால் மின்னிசோட்டா, நியூயார்க், நியூஇங்கிலாந்து, மிஷிகன், வடக்கு மற்றும் தெற்கு டகோதா, லோவா, விஸ்கான்சின், வாஷிங்டன், சிகாகோ, டெக்சாஸ், புளோரிடா, இல்லியான்ஸ், மிச்சோரி, பிரோன்ஸ்வில்லா ஆகிய பகுதிகள் கடுமையாக பாதிக்கப்பட்டன. கடும் உறைபனி கொட்டிய பகுதிகளில் பள்ளிகள், அரசு அலுவலகங்கள், கோர்ட்டுகளுக்கு விடுமுறை விடப்பட்டது.மேலும் இந்த கடும் பனியால் வாகனங்களில் பெட்ரோல், டீசல் போன்ற எரிபொருட்கள் உறைந்து போயின. இதனால் போக்குவரத்து முடங்கியது. உணவு பொருட்கள், அத்தியாவசிய பொருட்கள் குறித்த நேரத்தில் சப்ளை ஆகாமல் பல பகுதிகளில் வணிக நிறுவனங்களும் மூடிக்கிடந்தன.

## 4,392 விமானங்கள் ரத்து

சிகாகோ, நியூயார்க், பாஸ்டன் நகரங்களில் உள்ள சர்வதேச விமான நிலையங்களில் நேற்று பெட்ரோல் உறைவினால் பாதிக்கும் மேற்பட்ட விமானங்கள் ரத்து செய்யப்பட்டன. பல விமானங்கள் மிகவும் தாமதமாக புறப்பட்டன.அமெரிக்கா முழுவதும் 4,392 விமானங்கள் ரத்து செய்யப்பட்டன. 3,577 விமானங்கள் தாமதமாக சென்றன என்று விமான கட்டுப்பாடு துறை அதிகாரபூர்வமாக அறிவித்தது.

## மேலும் 4 பேர் பலி

இந்த கடும் குளிருக்கு நேற்றைய தினம் மேலும் 4 பேர் பரிதாபமாக இறந்தனர். இவர்களில் மூதாட்டி ஒருவர் ஆவார். கடும் பனிப்புயலால் மேற்கு மற்றும் மத்திய வடக்கு டகோதாவில் மைனஸ் 51 டிகிரி செல்சியஸ் வரையும், வேறு சில இடங்களில் 22 டிகிரி முதல் 33 டிகிரி செல்சியஸ் வரை இருக்கும் என தேசிய வானிலை நிலையம் எச்சரிக்கை விடுத்திருக்கிறது.

**பச்சரிசி, வெல்லம், சர்க்கரை உள்ளிட்ட பொங்கல் பண்டிகை பொருட்கள் விலை அதிரடி சரிவு வரத்து அதிகரிப்பால் கரும்பு விலையும் குறைந்தது**



சென்னை

பச்சரிசி, வெல்லம், சர்க்கரை உள்ளிட்ட பொங்கல் பண்டிகை பொருட்கள் விலை அதிரடியாக சரிந்துள்ளது. வரத்து அதிகரிப்பால் கரும்பு விலையும் குறைந்துள்ளது.

## பொங்கல் பண்டிகை

தமிழர் திருநாளான பொங்கல் பண்டிகை 14–ந்தேதி (செவ்வாய்க்கிழமை) உற்சாகமாக கொண்டாடப்பட இருக்கிறது. வீட்டு முற்றத்தில் அதிகாலையிலேயே கரும்பு, மஞ்சள் குலைக்கு மத்தியில், புதிய மண்பானையில் பச்சரிசி பொங்கல் வைத்து, ‘பொங்கலோ பொங்கல்’ என்று உற்சாக கோஷமிட்டு சூரியனை வழிபடுவது வழக்கம்.

அந்த வகையில், இந்த ஆண்டு பொங்கல் பண்டிகைக்கு தேவையான பொருட்கள் அனைத்தும் விலை குறைந்துள்ளதால், தமிழக மக்கள் அனைவருக்கும் இது தித்திக்கும் பொங்கலாகவே அமைய இருக்கிறது.

பொங்கல் வைக்க பயன்படும் பொன்னி பச்சரிசி (புதியது) ஒரு கிலோ கடந்த ஆண்டு ரூ.45–க்கு விற்பனை செய்யப்பட்டது, தற்போது ரூ.38 ஆக குறைந்துள்ளது. இதேபோல், பொன்னி பச்சரிசி (பழையது) ரூ.50–க்கு விற்பனையானது ரூ.46 ஆக விலை சரிந்துள்ளது.

வெல்லம் விலை சரிவு

சர்க்கரை பொங்கல் வைக்க பயன்படும் வெல்லம் வகைகளில், சேலம் வெல்லம் ரூ.55–ல் இருந்து ரூ.45 ஆகவும், வேலூர் வெல்லம் ரூ.60–ல் இருந்து ரூ.50 ஆகவும் விலை குறைந்துள்ளது. சர்க்கரை பொங்கலுக்கு மணமூட்டும் ஏலக்காய் ஒரு கிலோ கடந்த ஆண்டு ரூ.1000–க்கு விற்பனை ஆனது. தற்போது, ஏலக்காய் விலை ஒரு கிலோ ரூ.850 ஆக சரிந்துள்ளது. இதேபோல், சுக்கு ஒரு கிலோ ரூ.300–ல் இருந்து ரூ.240 ஆக விலை குறைந்துள்ளது.

சர்க்கரை பொங்கலுக்கு சுவையூட்டும் முந்திரி பழம் (கிஸ்மிஸ்) ஒரு கிலோ (முதல் ரகம்) கடந்த ஆண்டு ரூ.320–க்கு விற்பனையானது தற்போது ரூ.280 ஆகவும், 2–வது ரகம் முந்திரி பழம் ரூ.200–ல் இருந்து ரூ.160 ஆகவும் விலை குறைந்துள்ளது. முந்திரி பருப்பு (முதல் ரகம்) ரூ.500–ல் இருந்து ரூ.450 ஆகவும், 2–வது ரகம் ரூ.450–ல் இருந்து ரூ.400 ஆகவும் விலை சரிந்துள்ளது.

சேமியா விலை

தமிழ்நாட்டில் முந்திரி பருப்பு பண்ருட்டி, சேத்தியாத்தோப்பு பகுதியிலும், கேரளா மாநிலத்தில் கொச்சியிலும் அதிகம் பயிரிடப்படுகிறது. கடந்த ஆண்டு வீசிய ‘தானே’ புயலின்போது, தமிழ்நாட்டில் முந்திரி சாகுபடி 50 சதவீதம் அளவுக்கு பாதிக்கப்பட்டபோதும், இந்த ஆண்டு முந்திரி பருப்பு விலை ஓரளவு

குறைந்துள்ளது. வழக்கமான அளவு உற்பத்தி இருந்திருந்தால், முந்திரி பருப்பு விலை மேலும் குறைந்திருக்கும் என்று தமிழ்நாடு அனைத்து மளிகை வியாபாரிகள் சங்கத்தலைவர் எஸ்.பி.சொரூபன் தெரிவித்தார்.

பாயாசத்திற்கு பயன்படும் சேமியா ஒரு கிலோ கடந்த ஆண்டு ரூ.50–க்கு விற்பனை செய்யப்பட்டது. தற்போது, ரூ.45 ஆக விலை குறைந்துள்ளது. சர்க்கரை விலை ஒரு கிலோ ரூ.35–ல் இருந்து ரூ.30–ஆக சரிந்துள்ளது.

கரும்பு விலையும் சரிவு

பொங்கல் பண்டிகையில் முக்கியமாக இடம் பெறும் கரும்பு, தமிழகத்தில் தேனி, தஞ்சாவூர், பட்டுக்கோட்டை, மதுரை ஆகிய பகுதிகளில் பயிரிடப்படும். ஆனால், தேனியைத் தவிர மற்ற பகுதிகளில் இருந்து சென்னை கோயம்பேடு சந்தைக்கு கரும்பு வரத்து தொடங்கியுள்ளது. ஆந்திராவில் இருந்தும் கரும்பு வருகிறது.

தற்போதைய நிலையில், தினமும் 8 முதல் 10 லாரிகளில் கரும்பு வரத்து உள்ளது. பொங்கல் நெருங்கும் சமயத்தில் 50 லாரிகள் வரை கரும்பு வரத்து அதிகரிக்கும் என்று வியாபாரிகள் தெரிவித்தனர். 15 எண்ணிக்கை கொண்ட ஒரு கட்டு கரும்பு தற்போது ரூ.180–ல் இருந்து விற்பனை செய்யப்படுகிறது. கடந்த ஆண்டு ரூ.220 ஆக விற்பனை ஆனது. அதனால், வரும் நாட்களில் கரும்பு விலை மேலும் குறைய வாய்ப்பு உள்ளது.

அதே நேரத்தில், சென்னைக்கு மஞ்சள் குலை வரத்து இன்னும் தொடங்கவில்லை. பொங்கல் பண்டிகைக்கு ஓரிரு நாட்களுக்கு முன்புதான் மஞ்சள் குலை வரத்தொடங்கும் என்று வியாபாரிகள் தெரிவித்தனர்.

தி இந்து
தமிழால் இணைவோம்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## அதிக விளைச்சலை தரும் புதிய ரக பாசுமதி அரிசி

அதிக விளைச்சலைக் கொடுக்கும் புதிய ரக பாசுமதி அரிசியை இந்திய வேளாண் ஆராய்ச்சி மையம் (ஐஏஆர்ஐ) உருவாக்கியுள்ளது. இந்த ரகத்துக்கு பூசா-1509 என பெயரிடப்பட்டுள்ளது.

இந்த பாசுமதி ரகம் குறுவை சாகுபடி பருவத்தில் 5 ஆயிரம் ஹெக்டேர் பரப்பளவில் பயிரிடப்பட்டுள்ளது. அதிக லாபம் தரும் ரகமாக இருக்கும்பட்சத்தில் எதிர்வரும் ராபி பருவத்தில் 10 லட்சம் ஹெக்டேரில் இது பயிரிடப்படலாம் என்று ஐஏஆர்ஐ மையத்தைச் சேர்ந்த இப்புதிய ரகத்தைக் கண்டுபிடித்த பிரிவின் தலைவர் அசோக் கே. சிங் தெரிவித்தார்.

இதுவரை பூசா-1121 ரகமே மிகவும் பிரபலமாக விவசாயிகளால் பயிரிடப்படும் பாசுமதி ரகமாகும். புதிய ரகமான பூசா 1509 பாசுமரி நெல் 115 முதல் 120 நாளில் அறுவடைக்குத் தயாராகிவிடும். விவசாயிகள் பயன்படுத்தும் பூசா 1121 மற்றும் பாசுமதி ரகங்கள் 140 முதல் 145 நாள்களில்தான் அறுவடைக்குத் தயாராகும்.

புதிய ரகம் பயிரிடுவதன் மூலம் 30 நாள்களை விவசாயிகள் சேமிக்க முடியும். இதன் மூலம் ஜூன் மாதத்தில் பயிர் நடுவதற்குப் பதிலாக ஜூலை மாதத்தில் நாற்று நடலாம். தொடர்ந்து மழை ஆரம்பமாவதால் விளைச்சலும் அதிகரிக்கும். மேலும் ஆண்டுக்கு 60 நாள்கள் கிடைப்பதால் குறுகிய கால பயிர்களான பச்சைப் பயறு போன்ற பயறு வகைகளைப் பயிரிட முடியும்.

பூசா 1509 ரகம் ஒரு ஏக்கருக்கு 25 குவிண்டால் வரை விளைச்சல் தரும். இப்போது பயிரிடப்படும் பூசா 1121 ரகம் ஒரு ஏக்கருக்கு 20 குவிண்டால் வரை விளைச்சல் தருகிறது. மேலும் இதன் உயரம் 80 செ.மீ வரையாகும். பூசா 1121 120 செ.மீ.

வரை வளரும். புதிய வகை செடி குறைந்த உயரம் உள்ளதால் இதற்கு உரமிடுவது குறையும். பயிர்க்காலம் முழுமைக்கும் 2 மூட்டை முதல் 3 மூட்டை யூரியா பூசா 1509 ரகத்துக்குப் போதுமானது.

30 நாள்களுக்கும் குறைவான காலத்தில் பயிர் சாகுபடி அத்துடன் 25 சதவீத கூடுதல் விளைச்சல் ஆகியன பூசா 1509 ரகத்தின் சாதக அம்சம் என்று ஹரியாணா மாநிலத்தில் பானிபட் மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயி பிரீத்தம் சிங் கூறுகிறார். இந்த முறை 28 ஏக்கரில் பூசா 1509 ரகம் பயிரிட்டுள்ளேன், 11 ஏக்கரில் பூசா 1121 பயிரிட்டுள்ளேன். அடுத்த முறையிலிருந்து முழுவதுமாக பூசா 1509 ரகத்தை பயிரிடத் திட்டமிட்டுள்ளேன் என்கிறார் பிரீத்தம் சிங்.

பாசுமதி அரிசி வாசனையில் பூசா 1121-ஐக் காட்டிலும் மிகச் சிறந்த மணம் வீசக் கூடியதாக பூசா 1509 ரகம் உள்ளது என்றும் அவர் கூறினார்.